வாராந்த சஞ்சிகை
ஏப்ரல் 01 – 07, 2015

# சுடர் ஒளி

பக்கம் 24
விலை 30/-



# ஆட்டம் காணும் மாற்றத்துக்கான ஆட்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொழுதுபோக்குக் காதல்

காதல் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்துக்காகவே சிலர் காதலில் விழுவதுண்டு. பணம், செல்வாக்கு, ஆள் வலிமை உள்ள ஆண்கள் காதலில் தங்கள் பலத்தினை காட்டவேண்டும் என்பதற்காக, யாராவது ஒரு பெண் மீது குறி வைத்துக் காதல் காட்டுவார்கள்.


அந்தக் காதலை ஜெயிப்பதற்காக பணம், பலம் அனைத்தையும் காட்டுவார்கள். திருமணம் என்ற சூழல் ஏற்படும்போது மிக நல்ல பிள்ளையாக மாறி, அம்மா, அப்பா சொல்படிதான் நடப்பேன் என்பார்கள். ஏனென்றால் இவர்களது பெற்றோரின் சொத்து அவசியம் தேவை என்பதுதான் உண்மை.

இதேபோல் சில பெண்களும் தங்கள் இளமை மற்றும் அழகினை மற்றவர் முன் பறைசாற்றுவதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களுடன் மிகவும் அந்நியோன்யமாக பழகுவார்கள். அவர்களுக்கு என்று ஒரு எல்லை வைத்துக்கொண்டு, அதற்குப் பின் அந்தக் காதலர்களை அவமரியாதை செய்து அனுப்பிவிடுவார்கள்.

அதாவது இப்படிப்பட்டவர்கள் காதல் என்பதை ஒரு பொழுதுபோக்காக ஜாலியாக எடுப்பவர்கள். இப்படிப்பட்டவர்களிடம் சிக்கி ஏமாந்து போகும் ஆண், பெண்தான் ஏமாற்றம் தாங்க முடியாமல் தற்கொலை என்ற மோசமான முடிவினை எடுப்பதுண்டு.

இப்படிப்பட்ட காதலைக் கண்டுகொள்வதும், விலக்குவதும் மிக எளிது. அதாவது ஆரம்பமே மிக அவசரமாக இருக்கும்.

காதலிக்கிறேன் என்ற ஒரு வார்த்தையைத் தவிர மற்ற எல்லாவற்றையும் சகஜமாகப் பேசுவார்கள். எல்லா முடிவுகளும் அவர்கள் எடுப்பதாகவே இருக்கும். நாளை ஒரு இடத்துக்குப் போகலாம் என முடிவெடுத்தால் எங்கே போவது, என்ன செய்வது, எப்பொழுது திரும்புவது என எல்லாவற்றையும் அவர்களே முடிவெடுப்பார்கள்.



இந்த வகையான ஆண், பெண் இருவரும் திருமணம் பற்றி பேசமாட்டார்கள். நட்பு என்று சந்திப்பார்கள். இவர்களை நல்ல காதலர்களாக மாற்றுவது என்பது நாய் வாலை நிமிர்த்துவது போன்று கடினமானது.

எனவே, இப்படிப்பட்ட நபர்கள் என்று அறியவரும் பொழுது இது காதல் இல்லை என்று தெளிவடைவது நல்லது. மேலும், அவர்களுடன் நட்பினை தொடர்வதும் ஆபத்தானதே. ஏதாவது ஒரு கடினமான இக்கட்டான சூழலில் யாராவது ஒருவருடன் வாழ முடிவெடுத்துவிடுவார்கள். அவர்களுடன் கடைசி வரை ஓர் அடிமை நிலையில் வாழ வேண்டுமே தவிர அந்நியோன்யமாக வாழ முடியாது.

- பேராசிரியர் கலாநிதி. டி.காமராஜ்



# ரூ.10 இலட்சத்துக்கு 'பர்கர்' விற்பனை

உலகின் கோடீஸ்வர நாடாக அறியப்படும் துபாயில் ஒரேயொரு பர்கர் 25 ஆயிரம் திர்ஹம்களுக்கு விலைபோய் புதிய சாதனை படைத்துள்ளது. இது இலங்கை ரூபாயில் சுமார் 10 இலட்சம்.

'பிங்க் கேரவன்' என்னும் தொண்டு நிறுவனம் ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ள பெண்களுக்கு மார்பகப் புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும், இலவச பரிசோதனை முகாம்களையும் தொடர்ந்து நடத்தி வருகின்றது. ஆண்டுதோறும் 30 புற்று நோயாளிகளின் சிகிச்சைக்கான செலவுகளையும் இந்த அமைப்பு ஏற்றுக் கொள்கின்றது.

'பிங்க் கேரவன்' குழுவினரின் தொண்டுகளுக்கு நிதி திரட்டுவதற்காக இந்த அமைப்பினரின் நல்லெண்ண தூதரும், ஷார்ஜா அரசின் புள்ளியியல் மற்றும் சமுதாய மேம்பாட்டுத்துறையின் தலைவருமான ஷேக் முஹம்மது பின் அப்துல்லா அல் தானி என்பவர் ஒரு விசேஷ பர்கரை தயாரித்தார். துபாயில் உள்ள ஒரு ஷாப்பிங் மாலில் இந்த பர்கர் ஏலம் விடப்பட்டது.

ஏராளமான செல்வந்தர்கள் நான், நீ என இந்த பர்கரை வாங்கப் போட்டி போட்டுக் கொண்டு ஏலம் கேட்டனர். இறுதியில் 25 ஆயிரத்து 690 திர்ஹம்களுக்கு (இலங்கை மதிப்புக்கு சுமார் பத்து இலட்சம் ரூபாய்) இந்த பர்கர் ஏலம் போனது.

அமெரிக்காவின் லாஸ் வெகாஸ் நகரில் ஒரு பர்கர் 18 ஆயிரம் திர்ஹம்களுக்கு விற்கப்பட்டதே இதற்கு முந்தைய உலக சாதனையாக கருதப்பட்டது. அந்த சாதனையை முறியடித்து உலகிலேயே மிக அதிகமான விலைக்கு விற்பனையான பர்கர் என்ற பெருமையை இந்த துபாய் பர்கர் பெற்றது.

# செயற்கை முட்டை தயார்!

இலத்திரனியல் பொருள்களில் தன்னுடைய கைத்திறமையைக் காட்டி வந்த சீனா, தற்போது கோழி முட்டை தயாரிப்பிலும் கைத்திறமையைக் காட்டி வருகிறது. கோழி முட்டையை கோழி மட்டும் தான் போட வேண்டும் என்பது இயற்கையின் நியதி. ஆனால், சீனாவில் போலிக் கோழி முட்டைகளை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டனர். அதுகுறித்த விவரம் தான் இது. போலி முட்டை தயாரிக்க 7 வித இரசாயனங்களைப் பயன்படுத்துகிறார்கள் சீனர்கள்.

அதில் 'கல்சியம் கார்பனேட்', 'ஸ்டார்ச்', 'ரெசின்', 'ஜெலட்டின்', 'அலும்' மற்றும் சில இரசாயனங்கள் அடக்கம். போலி முட்டை தயாரிக்க உதவும் கல்சியம் கார்பனேட் ஒரு பாத்திரத்திலும், மஞ்சள் கருவுக்கு நிறம் சேர்க்க மஞ்சள் வண்ணக் கலவையும், மஞ்சள் கரு மற்றும் வெள்ளை ப் பகுதி உருவாக்கும் மோல்டுகள் அருகருகே வைக்கப்படுகின்றது. இரசாயனங்களைக் கலந்து போலியாகத் தயாரிக்கப்பட்ட மஞ்சள் கரு மோல்டில் ஊற்றப்படுகிறது.



மஞ்சள் கருவின் மேலே கல்சியம் கார்பனேட் மற்றும் சில இரசாயனங்களின் உதவியால் வெள்ளைக்கரு உருவாக்கப்படுகிறது. சற்று நேரத்தில் மஞ்சள் கருவைச் சுற்றி வெள்ளைப்பகுதி தயார். பின்னர் இது ஒரு மணி நேரம் காய வைக்கப்படுகிறது. பாரபின் மெழுகில் தோய்த்தெடுக்கப்படும் போலி முட்டை. பிறகு, அதன்மேல் செயற்கை ஒடு பொருத்தப்படுகிறது.

நிஜ முட்டையும் போலி முட்டையும்.

நிஜ கோழி முட்டையின் ஓட்டை விட எளிதாக உடையக் கூடியது இந்த போலி முட்டை ஒடு.

ஆனால் அதைப் பற்றிய கவலை சீன வாடிக்கையாளர்களுக்கு இல்லை. நிஜ முட்டைக்கும் போலி முட்டைக்கும் சுவையில் பெரிய வித்தியாசமில்லை என்று சொல்வதை விட போலி முட்டையின் சுவை அதிகமாக இருப்பதாகப் பேச்சு. 'ஹாப் வோயில்' போடும் போலி முட்டையின் அழகு தெரிய வருகிறது. மஞ்சள் கரு கொஞ்சம்கூட சிதறாமல் பந்துபோல் முழுதாக நிமிர்ந்து நிற்கிறதாம். மேலும், வெள்ளைக்கரு பரவும்போது நுரையும் அதிகமாக எழுகிறது.

போலி முட்டையை உண்பதால் உடலில் மெது மெதுவாக விஷம் ஏறுகிறது என்றும் இதன் விளைவுகள் மோசமாக இருக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கிறார்கள் உணவுத்துறை அறிஞர்கள். ஆனாலும் சீன போலி முட்டைத் தயாரிப்பாளர்கள் அடங்குவதாகத் தெரியவில்லை. காரணம் காசு! ஒரு கிலோ கோழி முட்டை 60 ரூபாய் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அதுவே போலி முட்டை ஒரு கிலோ தயாரிக்க 6 ரூபாய் தான் செலவாகிறது. ஏன் தயாரிக்க மாட்டார்கள். உணவு கலப்படம் மற்றும் போலி உணவுகளால் உடல் நலம் பாதிக்கப்பட்டு சீனாவில் இறப்பவர்கள் எண்ணிக்கை சமீப காலத்தில் அதிகரித்திருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் காணும் மாற்றத்துக்கான ஆட்சி



ஆசாத்

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவும் அவரின் அணியினரும் மக்களிடம் மாற்றத்துக்கான ஆட்சியை, அதாவது ஒரு நல்லாட்சிக்கான மாற்றத்தை ஏற்படுத்த ஆணை கோரியிருந்தனர். மக்களும்தமதுமனப்பூர்வமான ஆதரவை வழங்கி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி ஆக்கினர். அவரும் ஒரு நல்லாட்சியை நோக்கி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கினார். அவரும் ஒரு அமைச்சரவையை அமைத்துக் கொண்டார்.

மக்கள் மத்தியில் ஒரு நல்லாட்சி உருவாகப் போகிறது என்ற எதிர் பார்ப்புத் தொடர்பான நம்பிக்கை வலுவடைய ஆரம்பித்தது. அந்த வகையில் கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் மோசடிகள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டன. சில பெரும் புள்ளிகள் தொடர் பான விசாரணைகள் ஆமைவேகத்தில் திருப்தியற்றவிதத்தில் இடம்பெற்றபோதும், எதிர்காலத்தில் அவை நிறை வான பலன்களை விளைவிக்கக் கூடும் என்ற நம்பிக்கைஉடைந்துபோய்விடவில்லை.

அண்மையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த 28 பேர் தேசிய அரசாங்கம் என்ற பேரில் அமைச்சர்களாக ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதை அவரின் ஒரு தவறான நடவடிக்கை என்று கூறிவிடமுடியாது. ஆனால், அப்படியான ஒரு தேசிய அரசாங்கம் ஒரு மாற்றத்துக்கானதும், நல்லாட்சிக்குமானதா இருக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும். மக்கள் ஏற்கனவே மைத்திரி பால சிறிசேன அவர்களை ஜனாதிபதியாக்கி ஆட்சியில் அமர்த்தினர்.


ஆனால் புதிதாக அமைச்சர்களாக நியமனம் பெற்ற சில ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்களின் கடந்த கால நடவடிக்கைகள் இந்த அரசால் நல்லாட்சிக்கான நியாயமான பங்களிப்பை வழங்கமுடியுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளன.

முன்னாள் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க அவர் பதவி வகித்த காலத்திலும் அதற்கு முன்பு விளையாட்டுத்துறை அமைச்சராகப் பதவி வகித்த போதிலும் அவர் ஒரு அமைச்சர் என்பதை விட ஒரு தெருச்சண்டியன் போலவே நடந்துகொண்டார்.

இவர் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தபோது இலங்கையின் தடகளப் போட்டி ஒலிம்பிக் போட்டி வீராங்கனையான சுசந்திகா ஜெயசிங்கவுடன் முறைகேடாக நடக்க முற்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அதன் காரணமாக அந்த வீராங்கனை பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்ததுடன் பெரும் மனத்தாக்கத்துக்கும் ஆளானார். இவர் உயர் கல்வி அமைச்சராக இருந்த போது இலங்கையில் உள்ள எந்த ஒரு பல்கலைக் கழகமும் குழப்பங்களின்றி நடைபெறவில்லை. அரசியல்வாதிகளின் அடிவருடிகளே பல்கலைக் கழக உபவேந்தர்களாக நியமிக்கப்பட்டனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு சர்வதிகாரிகளாக நடந்து கொண்டு மாணவர்களை வெறும் அடிமைகளாகவே நோக்கினர். மாணவர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தும் போது அவர்கள் மிருகத்தனமான முறையில் அடக்கப்பட்டனர். மாணவர்களின் பேரணிகள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகங்களை மேற் கொண்டதுடன் அவர்களைக் கைது செய்து தடுத்து வைக்கும் சம்பவங்களும் இடம்பெற்றன. ஒரு பிரதியமைச்சர் தலைமையிலான குண்டர் கூட்டம் பல்கலைக்கழக வளாகத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தும் அளவுக்கு நிலைமை கேவலமாக இருந்தது. சப்பிரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போது எஸ்.பி.திஸநாயக்க தேர்தல் காலமாக இல்லாவிடில் அதை நான் வேறுவிதமாக கையாண்டிருப்பேன் என மிரட்டியதும் , அடுத்தடுத்த நாள்களில் மாணவர்களின் போராட்டத்துக்கு பிரதேச சபை உறுப்பினர் தலைமையில் சென்ற ஒரு குழுவினரால் அமைக்கப்பட்டிருந்த கொட்டகை எரிக்கப்பட்டதையும் மறந்து விடமுடியாது. அது மட்டுமன்றி இவர் காலத்திலேயே சப்பிரகமுவ மாணவன் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் படி கைது செய்யப்பட்டனர்.

மாணவர் சமூகம் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு தீவிரமாகப் பாடுபட்டமைக்கு இவரும் ஒரு முக்கிய காரணகர்த்தா என்பதை எவரும் மறுத்து விடமுடியாது.

இப்படியான ஒரு நிலையில் எஸ்.பி. திஸநாயக்கா கிராமிய பொருளாதார அமைச்சராக நியமிக்கப்பட்டமை மாணவர் மத்தியிலோ, மக்கள் மத்தியிலோ எவ்வகையிலும் நியாயப்படுத்தப்பட முடியாததாகும்.



அதிகாரம் ஒன்றையே இலக்காக வைத்து அடிக்கடி கட்சிமாறும் இவர் போன்ற வர்கள் எப்படி நல்லாட்சி நடப்பதற்கு கரம் கொடுக்க முடியும்?

பெருந்தோட்டத்துறை அமைச்சராகவும், முன்னாள் ஜனாதிபதியின் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சிறப்புப் பிரதிநிதியாகவும் விளங்கியவர் மஹிந்த சமரசிங்க. இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியை ஒரு தமிழர் என்பதால் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் எனக் குற்றம் சாட்டியவர். இலங்கையில் போர்க் குற்றங்களோ ,மனித உரிமை மீறல்களோ இடம்பெறவில்லை என்று கூறி ஐ.நா விசாரணையைத் தடுத்த நிறுத்தப் பெருமுயற்சி மேற் கொண்டு சர்வதேச அளவில் இலங்கைக்கு அவப்பெயரைப் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று உழைத்தவர். எப்படியிருந்த போதிலும் பெருந்தோட்டத்துறையில் தமிழ் தொழிலாளர்களுக்கு விரோதமாகவும் ,சர்வதேச அளவில் தமிழ் மக்களுக்கு விரோதமாகவும் செயற்பட்டு தன்னை ஒரு அப்பட்டமான இனவாதியாகக் காட்டிக்கொண்டவர். தமிழ் மக்கள் மஹிந்த அரசுக்கு எதிராகத் திரண்டு எழ இவரும் ஒருகாரணமாகும்.

பேருவளை, அவிசாவளை ஆகிய இடங்களில் முஸ்லிம் மக்களின் உயிர்கள், சொத்துக்கள் அழிக்கப்பட்டபோதும், நாடு முழுவதும் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டபோதும் முஸ்லிம் மக்களைப் பொறுமை காத்து இன ஐக்கியத்தைப் பேணும் படி பிரசாரம் செய்தவர் முன்னாள் சிரேஷ்ட அமைச்சர் பௌஸி. இதன் காரணமாக முஸ்லிம் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்தவர் அவர்.

இப்படியாக இந்த 28 பேரில் பெரும்பாலானவர்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் வெறுப்பைச் சம்பாதித்து அவர்களால் புறமொதுக்கப்பட்டவர்கள். இப்படியே தொடர்ந்து மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இவர்கள் ஒரு நல்லாட்சியின் நேர்மையான பங்காளிகளாக விளங்க முடியுமா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாததாகும். குறிப்பாக நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சரவை நியமனம் பெற்ற மஹிந்த யாப்பா அபயவர்த்தன அவர் நியமனம் பெற்ற அன்றே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து ஒருமக்கள் சந்திப்பை மேற்கொண்டுள்ளார்.

எப்படியிருப்பினும் இது ஒரு நல்லாட்சிக்கான அரசாங்கமா அல்லது பழைய பாதையில் செல்லப் போகும் எதேச்சதிகார அரசாங்கமா என்பது வெகுவிரைவிலேயே தெரியவந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறக்கும் பொதுத் தேர்தல் களம்

-புருஜோத்தமன் தங்கமயில்

ஆட்சியதிகாரத்தைத் தீர்மானிக்கும் தேர்தல் சதுரங்கத்தின் மற்றொரு ஆட்டத்துக்கான களம் பொதுத் தேர்தல் எனும் வடிவில் மெல்லத் திறக்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து சில மாதங்கள் மாத்திரமே கடந்துள்ள நிலையில், மற்றொரு பிரதான தேர்தலை மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன தேசிய அரசாங்கமொன்றை அமைத்தார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக தேசிய அரசாங்கம், 100 நாள்கள் கொண்ட செயற்றிட்டமொன்றையும் முன்மொழிந்தது. அந்த செயற்றிட்டம் நிறைவுற்றதும் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்வதற்கான அறிவித்தலையும் ஏற்கனவே விடுத்திருந்தது.



ஆனால், தேசிய அரசாங்கம் முன்மொழிந்த 100 நாள்கள் செயற்றிட்டத்தை குறித்த நாள்களுக்குள் முடிப்பதற்கான சாத்தியப்பாடுகள் இப்போதைக்கு இல்லை. இந்த நிலையில், நாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் தேசிய அரசாங்கத் தின் பங்காளிக் கட்சிகளுக்குள்ளேயே மாற்றுக் கருத்துக்கள் எழுந்துள்ளன.

ஆனாலும், தேசிய அரசாங்கத்தின் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றம் வரும் ஏப்ரல் 24ஆம் திகதி கலைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது. அதனை நோக்கிய நகர்வுகளையும் கச்சிதமாக முன்னெடுக்கின்றது.

தேசிய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தன்னுடைய பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான அழுத்தங்களை ஆரம்பத்தில் எதிர்கொண்டாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரானதும் அதற்கான சிக்கல்கள் நீங்கின. ஆனால், நீங்கிய சிக்கல்கள் புதிய வடிவில் எழுந்தன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது எனும் விடயத்தை தேர்தல் முறை மாற்றத்தோடு சம்பந்தப்படுத்தி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அழுத்தங்களை வழங்க ஆரம்பித்தது. ஆனாலும், ஓரளவுக்கு அவற்றை தன் சார்பில் கையாண்டு (குறைபாடுள்ள) 19ஆவது திருத்த சட்டமூலத்தினை கடந்த செவ்வாய்க்கிழமை தேசிய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

100 நாள்கள் செயற்றிட்டத்தில் முக்கிய விடயமாக கொள்ளப்பட்ட 19ஆவது திருத்த சட்டத்தினை நிறைவேற்றியதும், நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. ஆக, ஏப்ரல் 24ஆம் திகதி இல்லையென்றாலும், அடுத்து வரும் ஒன்றிரண்டு மாதங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்று நடத்தப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் பல தரப்புக்களோடு இணைந்து அமைத்த வியூகத்தினூடாக வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி, பொதுத் தேர்தலை பெரும் ஆர்ப்பரிப்போடு எதிர்கொள்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த தருணத்திலிருந்தே அதற்கான ஆயத்தங்களில் அந்தக் கட்சி ஈடுபடுகின்றது.

கடந்த காலங்களில் அந்தக் கட்சிக்குள் காணப்பட்ட தலைமைத்துவத்துக்கான பிரச்சினைகள் இப்போது இல்லை.

ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாஸவும் ஒரே அணியில் கட்சியின் வெற்றி தொடர்பில் சிந்தித்து ஒன்றிணைந்து விட்டார்கள். மஹிந்தராஜபக்ஷவை வீழ்த்தியாகிவிட்டது, இனி மற்றவர்களை இலகுவாக கையாளலாம் என்கிற எண்ணம் அவர்களை இன்னமும் உற்சாகம் கொள்ள வைத்திருக்கின்றது.

பொதுத் தேர்தலின் பின்னரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் தேசிய அரசாங்கமொன்று இரண்டு வருடங்களுக்கு பதவியிலிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், அந்த தேசிய அரசாங்கத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் இருப்பதையே விரும்புகின்றது. அதுதான். அடுத்து வரப்போகும் ஐந்து, ஆறு வருடங்களுக்கான ஆட்சியதிகாரத்தை தீர்மானிக்கும் வல்லமை கொண்டது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெறுவது தொடர்பில் அக்கறை கொண்டு செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்க, பொதுத் தேர்தலில் சிங்கள மக்களிடம் அதிக வாக்குகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் அதிக கரிசனையோடு இருக்கின்றார்.

எந்தவொரு தருணத்திலும் சிங்கள பௌத்த தேசியவாதிகள் ஐக்கிய தேசியக் கட்சி மீது அதிருப்தி கொண்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றார். தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் தேசிய அரசாங்கம் முன்னெடுக்கும் விடயங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கரங்களைக் கொண்டே செய்விக்கின்றார்.

எந்தவொரு தருணத்திலும் தமிழ் மக்களின் சிறிய பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயமும், பௌத்த தேசியவாதிகளை கோபப்படுத்தி, தேர்தல் வெற்றிகளை கேள்விக்குள்ளாக்கிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அண்மைக்காலங்களில் எழுந்துள்ள பிரச்சினையும் அதன்போக்கிலேயே கையாளப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்க தன்மீது சேற்றை வாரியிறைத்தவர்களையே தன்னுடைய நலனுக்காகச் சேர்த்துக் கொள்பவர்.

அதிகாரத்தினை அடையும் வழிமுறைகள் மாத்திரமே அவரின் இலக்கு. ஆனால், தன்னை நோக்கி வடக்கு மாகாண முதலமைச்சர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை சிங்கள பௌத்த தேசியவாதிகளின் மனங்களை வெல்லும் முகமான சதுரங்க ஆட்டத்துக்காக பயன்படுத்துகின்றார். சி.வி. விக்னேஸ்வரனை 'மகா பொய்யர்' என்று இந்தியத் தொலைக்காட்சியொன்றிலேயே பகிரங்கமாக குற்றஞ்சாட்டுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுமக்களின் காணி மீளக் கையளிப்பு நிகழ்விலும் சி.வி.விக்னேஸ்வரனை எதிர்கொள்ளவதை தவிர்த்துக் கொண்டு தன்னுடைய கோபம் உண்மையானது போன்ற தோற்றப்பாட்டை ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தினார்.

அதை நிரூபிக்கும் வகையில் சி.வி. விக்னேஸ்வரனும் நடந்து கொண்டார். அவர்கள் இருவரும் முகத்தை திரும்பிக் கொண்ட விடயம் முள்பள்ளி மாணவர்களின் கோபம் போல இருந்தாலும், ரணில் விக்கிரமசிங்கவின் அந்த நடத்தை என்பது மிகவும் கச்சிதமாக கட்டமைக்கப்பட்டிருக்கின்றதோ என்று நாம் நம்ம வேண்டியிருக்கின்றது. எதுவும் அறியாமல், சி.வி.விக்னேஸ்வரன் பலிக்கடாவாகியிருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பெரும் திட்டமிடல்களுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் தலைமை வகிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை எப்படிக் கட்டுக்குள் கொண்டு வருவது என்பது தொடர்பில் யோசித்துக் கொண்டிருக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து கட்சித் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்டதும் கட்சியின் முக்கியஸ்தர்களை இலகுவாக கையாளலாம் என்று எதிர்பார்த்த மைத்திரிபால சிறிசேனவுக்கு அது அவ்வளவு இலகுவாக சாத்தியமாகவில்லை. மாறாக, அவருக்கு அடங்கா குதிரைகளின் ஆட்டம் பெருமளவில் அதிகரித்திருக்கின்றது.

அத்தோடு, இன்னமும் மஹிந்த ராஜபக்ஷ அபிமானிகள் கட்சிக்குள் இருப்பது அவரை தன்னுடைய திட்டங்கள் நோக்கி நகர்த்துவதற்கு தடையாக இருக்கின்றது. அதனை, கட்சியின் முக்கியஸ்தர்களுக்கிடையிலான அண்மைய கூட்டமொன்றிலேயே அவர் வெளிப்படையாக அறிவித்திருக்கின்றார்.

'கட்சித் தலைமைப் பதவியை எனக்கு வழங்கியிருக்கிறீர்கள் என்றால், என்னை செயற்படுவதற்கு அனுமதியுங்கள்' என்பது மாதிரியான விரக்தி வெளிப்பாட்டுடான கோரிக்கை அது. அதனை, சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களை நோக்கி விடுத்ததாகவே கொள்ள முடியும்.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களை கையாள்வது தொடர்பில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் மேற் கொண்ட நடவடிக்கையானது ஓரளவுக்கு வெற்றி பெற்றிருக்கின்றது.

அதனை, தேசிய அரசாங்கத்துக்குள் சுதந்திரக் கட்சியையும் முழுமையாக(?) இணைத்துக் கொண்டதினூடு சாத்தியமாக்கியிருக்கின்றார். எனினும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் கட்சியை முழுமையாக தன்னுடைய தலைமையின் கீழ் ஒருங்கிணைப்பது தொடர்பில் அவர் இன்னமும் சிக்கல்களை எதிர்கொள்கின்றார்.

அதைனைவிட இன்னொரு பெரும் சிக்கல் அவரைப் பின்தொடர்கின்றது.

அது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தேர்தல் அரசியல் களத்துக்குள் பிரவேசிப்பது தொடர்பிலான விடயம். சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியே தன்னுடைய தேர்தல் அரசியல் பிரவேசம் மீண்டும் அமையும் என்று வெளிப்படையாக மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கின்றார். இந்த நிலையில், மஹிந்த ராஜபக்ஷவையும், அவர் சார்பானவர்களையும் எப்படிக் கையாள்வது என்பது தொடர்பிலான சிக்கலும் நீள்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் திட்டங்களை முறியடிப்பது தொடர்பில் இன்னொரு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் ஒத்துழைப்புடன் மைத்திரிபால சிறிசேன செயற்பட்டாலும், அவர், சந்திரிக்கா குமாரதுங்க தொடர்பிலும் அதிகளவான பயத்தினைக் கொண்டிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் அதனை அவர் தனக்கு நெருக்கமான

**(7 ஆம் பக்கம் பார்க்க)**


**ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெறுவது தொடர்பில் அக்கறை கொண்டு செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்க, பொதுத் தேர்தலில் சிங்கள மக்களிடம் அதிக வாக்குகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் அதிக கரிசனையோடு இருக்கின்றார்.**

**எந்தவொரு தருணத்திலும் சிங்கள பௌத்த தேசியவாதிகள் ஐக்கிய தேசியக் கட்சி மீது அதிருப்தி கொண்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றார். தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் தேசிய அரசாங்கம் முன்னெடுக்கும் விடயங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கரங்களை கொண்டே செய்விக்கின்றார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரன் பகத்சிங்கும் மகாத்மாகாந்தியும்



அக்கினிகுமரன்

> மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட லாலா லஜபதிராஜ் என்ற சுதந்திரப் போராட்டத் தலைவர் மூன்றாம் நாள் உயிரிழக்கிறார். அவரின் மரணம் முழு வங்க மாநிலத்தையும் கொதிப்படைய வைக்கிறது. பல இடங்களிலும் போராட்டங்கள் வெடிக்கின்றன. பகத்சிங் தலைமையிலான இந்துஸ்தன் சோசலிஷ கழகத்தினர் லாலா லஜபதிராயின் மரணத்துக்குப் பழி வாங்க முடிவு செய்கின்றனர்.

23.03.1931.

அந்த நாளை நினைக்கும் போது விடுதலை விரும்பும் ஒவ்வொரு உள்ளங்களும் துடிக்கும். நரம்புகள் முறுக்கேற ஒரு புதிய உத்வேகம் தோன்றி உடல் சிலிர்க்கும்.

அன்று தான் இந்திய விடுதலைப் போராட்ட வீரர் பகத்சிங்கும், அவரது தோழர்களான ராஜகுரு, சுகதேவ் ஆகியோரும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் தூக்கு மேடையில் ஏற்றப்பட்டு வீரச்சாவைத் தழுவினர்.

கடைசி நிமிடத்தில் கூட கழுத்தில் தூக்குக் கயிறு மாட்டப்பட்ட போது கூட "ஜெய் ஹிந்" என முழங்கியவாறே மரணத்தை நோக்கிப் பயணித்தனர்.

உலக அரங்கில் சேகுவாரா எப்படி விடுதலை விரும்பும் மக்களுக்கும் புரட்சிகரப் போராளிகளுக்கும் ஆதர்ஷ வழிகாட்டியாக விளங்குகிறாரோ அவ்வாறே பகத் சிங் இந்திய இலங்கை மக்களின் துருவ நட்சத்திரமாக திகழ்கிறார்.

இந்தியாவில் பிரிட்டிஷ் அரசால் கொண்டு வரப்பட்ட வங்கப் பிரிவினைச் சட்டத்துக்கு எதிராகச் சுதந்திரப் போராட்ட வீரர் லாலா லஜபதிராய் தலைமையில் பெரும் போராட்டம் வெடிக்கிறது. லாகூர் நகரை உலுக்கியவாறு அந்தப் பிரமாண்டமான பேரணி விடுதலை வேட்கையுடன் நகர்கிறது.

மக்களின் சுதந்திர உணர்வை அடக்கி விட பொலிஸ் படை பேரணி மீது வெறி கொண்டு பாய்கிறது. சண்டர்சன் என்ற பொலிஸ் சார்ஜண்ட் தலைமையில் வந்த பொலிஸார் மீது மக்கள் மிருகத்தனமான முறையில் தாக்குதலை நடத்துகின்றனர். பேரணிக்குத் தலைமை தாங்கி வந்த லாலா லஜபதிராய் மீது சண்டர்ஸன் நடத்திய தடியடிப் தாக்குதலில் அவர் மண்டை பிளக்க விழுகிறார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட லாலா லஜபதிராய் என்ற சுதந்திரப் போராட்டத் தலைவர் மூன்றாம் நாள் உயிரிழக்கிறார். அவரின் மரணம் முழு வங்க மாநிலத்தையும் கொதிப்படைய வைக்கிறது. பல இடங்களிலும் போராட்டங்கள் வெடிக்கின்றன. பகத்சிங் தலைமையிலான இந்துஸ்தான் சோசலிஷ கழகத்தினர் லாலா லஜபதிராயின் மரணத்துக்குப் பழி வாங்க முடிவு செய்கின்றனர்.

பகத்சிங், ராஜகுரு,சந்திரசேகர ஆசாத் ஆகியோரைக் கொண்ட குழுவினர் லாகூர் நகர மத்தியில் அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வைத்து சார்ஜன்ட் சண்டர்சனைச் சுட்டுக் கொல்கின்றனர். அவனுக்கு உதவியாக வந்த பொலிஸ்காரனையும் சுட்டு விட்டு போராளிகள் தப்பி விடுகின்றனர்.

இந்தத் துணிகரத் தாக்குதல், பிரிட்டிஷ் ஆட்சிப் பீடத்தையே கதிகலங்க வைக்கிறது. தாக்குதல் நடத்தியவர் கள் யாரென்பதையும், அவர்களைப் பிடிக்கவும் எங்கும் உளவாளிகள் நடமாடுகின்றனர்.

இந்த நிலையில் வங்கப் பிரிவினையை அமுல்படுத்து வதற்கான சட்டம், சட்ட சபையில் கொண்டு வரப்படுகிறது. அதை எதிர்த்து மோதிலால் நேரு உரையாற்றிக் கொண்டிருந்த போது , சட்ட சபையின் நடுவில் வீசப்பட்ட வெடிகுண்டு வெடிக்கிறது. பார்வையாளர் பகுதியில் இருந்த பகத்சிங் துண்டுப்பிரசுரங்களை வீசுகிறார். வெடிகுண்டு சட்ட சபையின் மத்தியில் விழுந்த போதும் எவருக்கும் ஒரு சிறு காயம் கூட ஏற்படுத்தவில்லை. அது அந்த நோக்கத்துடன் எறியப்படவில்லை. அந்தச் சம்பவம் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பிரச்சார வடிவமாகவே மேற்கொள்ளப் படுகிறது. பகத்சிங் அந்த இடத்திலேயே கைது செய்யப்படுகிறார். அவர் எவ்வித எதிர்ப்பையும் காட்டாமலே கைதாகிறார்.

ஆனால் அந்தச் செய்தியும் அந்தத் துண்டுப்பிரசுரமும் அடுத்த நாள் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளிவந்து மக்கள் மத்தியில் விடுதலை பற்றிய புதிய நம்பிக்கையையும் பேரெழுச்சியையும் ஏற்படுத்துகின்றன.

பகத் சிங் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. எனினும் அவர் நீதிமன்றத்தில் ஆற்றிய உரை ஒரு பெரும் புரட்சிப் பிரகடனமாக மக்கள் மத்தியில் விடுதலைக் கனலை ஏற்றுகின்றது.

பின்பு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ராஜகுரு, சுகதேவ் உட்பட சில தோழர்கள் கைது செய்யப்படுகின்றனர். அவர்கள் சிறையில் இருந்த போதே சண்டேர்சன் கொலை தொடர்பாக வழக்குத் தொடுக்கப்படுகிறது.

அந்த வழக்கில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூவருக்கும் மரண தண்டனை வழங்கப்படுகிறது.

அவர்களின் மரண தண்டனை இரகசியமாகவே நிறைவேற்றப்பட்டு அவர்களின் உடல்கள் இரகசியமாகவே எரிக்கப்பட்ட போதிலும் அந்தச் செய்தி வெளியே கசிந்து வருகின்றது. அது நாடெங்கிலும் பெரும் கலகங்களை மூட்டி விடுகிறது.

பகத்சிங்கும் தோழர்களும் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது பிரிட்டிஷ் அதிகாரி இர்வினுக்கும் மகாத்மா காந்திக்குமிடையே பேச்சுவார்த்தை இடம் பெறுகிறது. சுபாஸ் சந்திரபோஸ் தலைமையிலான செயற்குழு பகத்சிங்கும் தோழர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும் என இர்வினிடம் கோரும் படி வலியுறுத்துகிறது. காந்தி ,தான் ஒரு வன்முறையாளனுக்காகப் பேச முடியாது என்று மறுத்து விடுகிறார். சுபாஸ் கோபம் கொண்டு காங்கிரஸை விட்டே வெளியேறுகிறார்.

பகத்சிங் ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்ட பின்பு காந்தி அனுதாபம் தெரிவிக்க வேண்டுமெனக் காங்கிரஸ் மகாசபை தீர்மானம் எடுக்கிறது. ஆனால் காந்தியோ அதை மறுத்து "ஒரு இந்தியனின் மரணத்துக்காக வருந்துகிறேன்" என அறிக்கை விட்டார்.

அஹிம்சைக் கொள்கை என்ற பேரில் விடுதலை வீரர்களின் சுதந்திர வேட்கையை யும் , தியாக உணர்வையும் மதிக்க மறுத்த மஹாத்மா காந்தியைத்தான் இந்தியாவின் தேசத்தந்தை எனப் போற்றுகின்றனர். வெள்ளையினப் பொலிஸ் அதிகாரி சண்டேர்சனின் உயிருக்கு அவர் கொடுத்த மதிப்பை, மகத்தான தலைவர் லாலா லஜபதிராய் உயிருக்கோ, பகத்சிங்கின் உயிருக்கோ அவரால் கொடுக்க முடியவில்லை.

அத்தகைய காந்தியின் வழி வந்த இந்திய ஆட்சியாளர்கள் , இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கும் விதத்தில் செயற்படுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# வடக்கைப் பயமுறுத்தும் சிறுநீரகப் பாதிப்பு

வடக்கில் சிறுநீரகப் பாதிப்பு அதிகரித்து வருகிறது. தொற்றா நோய் வகை சேர்ந்த அந்த வியாதி மிக வேக மாகப் பரவி வருகிறது. எம்மிடையே உணவுப்பழக்கங்கள் மாறியமையும் உடல் உழைப்புக் குறைந்ததுமே அதற்கான மிகப் பிரதான காரணிகள்.

யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தினரால் ஏற்பாடு செய் யப்பட்ட சிறுநீரகப் பாதிப்புக் குறித்த செயலமர்வில், பொது மருத்துவ நிபுணர் த. பேரானந்தராஜா புதிய ஆபத்துக் குறித்து எடுத்துரைத்தார்.

வடக்கில் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் மலேரியா, அம்மை போன்ற தொற்று நோய்களே எங்கள் பிரதேசங்களில் மக் களைப் பெரும் அளவில் பாதிப்புற வைத்தன.

ஆனால் இப்போது தொற்றா நோயான சிறுநீரகப் பாதிப்பே ஓங்கி உயர்ந்து மக்களை வாட்டத் தொடங்கி உள்ளது. மருத்துவ நிபுணர் அதனை விலாவாரியாக எடுத்து ரைத்தார்.

மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்டு வரும் மாற்றங் கள் என்ற வகையிலான தவறுகளே, புதிய ஆபத்துக்குக் காரணம் என்றும் அவர் தொட்டுக் காட்டினார்.

எமது உடலில் உண்டாகும் உற்பத்தியாகும் கழிவுப் பதார்த்தங்களை அகற்றும் செயற்பாட்டை, பணியை செய் யும் சிறுநீரகம் குருதி அழுத்தத்தையும் சீர்செய்கிறது. அவற் றின் ஊடாக எமது உடலின் சமநிலையைப் பேணிப்பாது காக்கிறது.

சீனி, உப்புப் பாவனையும் , நாளாந்த உடற்பயிற்சிக் குறை வும் சீறுநீரகப் பாதிப்பின் வீதாசாரம் அதிகரிப்பதற்கான காரணிகளின் வரிசையில் அடங்குகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமன்றி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் சீறுநீரகச் செயலிழப்பு அதிகரித்து வருவதும் செயலமர்வில் சுட்டிக் காட்டப்பட்டது.

நாளாந்தம் ஒருவர் ஆகக் குறைந்தது மூன்று முதல் நான்கு லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும். அவ்வாறில்லை எனின் சிறுநீரகப் பாதிப்பு உண்டாகும்.

எங்கள் பிரதேசங்களில், இப்போது கால்நடையாகப் பயணிப்போர் வீதாசாரம் குறைந்து விட்டது. வாகனங்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது .

எமது முன்னவர்கள் போக்குவரத்தினை கால் நடை யிலேயே செய்தனர். தமது நாளாந்தத் தேவைகளை , நடந்து சென்றே பெற வேண்டிய நிலை, கட்டாய நிலை மேலோங்கி நின்றது.

மேலும் உடற்பயிற்சிக்கும் மேலாக மிகப் பெரும்பாலா னோர் பாதசாரிகளாகவே தமது சுக நலத்தைப் பேணினர்.

ஆனால், இப்போது அந்த நிலை அருகிவிட்டது.

சிறுநீர்கம் எமது உடலின் மிகப் பிரதானமான உறுப்பு களில் ஒன்று. அதனைக் கவ்விக் கொள்ளும் நோய்களை வருமுன் தடுக்க வேண்டும்.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தில், சிறுநீரகத்தைப் பேணுவதற்கான நடைமுறைச் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சிறு நீரக நோய்களுக்கான மூலகாரணங்கள் என்று கருதப் படும் களை நாசனி மற்றும் விவசாய இரசாயன பொருள் களுக்கு இடைக்காலத்தடை விதிப்பது குறித்து பிரஸ் தாபிக்கப்பட்டது. ஆனால் அது குறித்து மேற்கொண்டு எதுவுமே வெளிப்படவில்லை. நூறுநாள் திட்டத்தின் சுகாதார அலகு கிடப்பில் போடப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் குறித்தே இப்போது அரச பிரதானிகள் ஆலாய்ப் பறக்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி அடைவதற்கான மூலோபாயங்களை வரிசைப்படுத்திச் செயலாக்கவே முனைப்புடன் செயற்படுகிறார்கள்.

அதனால் சிறுநீரக நோய்களைத் தடுப்பதில் தனிநபர் அக்கறையும் செயற்பாடுகளும் உடனடித் தேவை. அது அத்தியாவசியம்.



# மீண்டெழுவாரா மஹிந்த

**- கோமேஸ்**

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மஹிந்தராஜபக்ஷவுக்கு எதிராக மட்டும் வாக்களிக்கவில்லை. வடபகுதி எங்கும் மூழ்கிக் கிடந்த அரசியல் சாக்கடையை தூக்கி எறிந்து மீண்டும் ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்தை விரும்பியே வாக்களித்தனர்.

அந்த வாக்களிப்பால் ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. அது வரவேற்கப்பட வேண்டிய விடயமே. ஆனால் அண்மைக்காலமாக நாட்டில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் போக்கிலே செல்வதைக் காட்டுகிறது.

சற்று விரிவாகப் பார்த்தால், மகிந்தவின் ஆட்சியில் யாழ்ப்பாணத் தில் ஒருவரும், கிளிநொச்சியில் இன்னொருவரும் மன்னாரில் இன்னொருவர் என தாங்கள் நினைத்தபடி ஆட்சியை வடக்கில் நடத்தினார்கள். அவர்கள் கொலை, கொள்ளை, கட்டப் பஞ்சாயாத்து. காணி அபகரிப்பு போன்றவற்றில் ஈடுபட்டனர்.

அதேபோல தென்னிலங்கையிலும் ஒரு சிலர் தாங்கள் நினைத்தபடி ஆடித் திரிந்தார்கள். தேர்தல் முடிந்த கையோடு சிலரின் ஆட் டம் அப்படியே அடங்கிப் போய்விட்டது. ஆனால் அவர் களில் முக்கிய மானவர்கள் தற்போதைய தேசிய அரசு என்ற மாயை அரசுக்குள் உள்வாங்கப்பட்டு, அவர்களுக்கு சுற்றியிருந்த அமைச்சு, பிரதி அமைச்சு, பதவி வழங்கப்பட்டுள்ளது. போகிற போக்கில் பார்த்தால் கோத்தபாய, மகிந்த போன்றவர்களும் மைத்திரி அரசில் அடைக்கலம் அடைந்துவிடுவார்கள்.

இது நடிகர்கள் மாறியுள்ளனரே ஒழிய நாடகத்தின் கதை மாறவில்லை. வசனங்கள் மாறியுள்ளதே தவிர நாடகத்தின் கரு மாறவில்லை என்று கூறலாம். மக்கள் தோற்கடித்த நபர்கள் இன்று மீண்டும் அமைச்சுப் பதவிகளில் அமர்திருப்பது வேடிக்கையான விடயமே,

சுகபோக வாழ்க்கை வாழ்ந்தவர்கள் திடீரென அனுபவித்த அனைத்து சுகபோகங்களும் பறிபோவதை விரும்ப மாட்டார்கள். அதைப் போலத் தான் மகிந்த அரசில் இன்ப வாழ்க்கை வாழ்ந்தவர்கள் அதை தொடர்ந்து அனுபவிக்க வேண்டும் என்பதற்காக புதிய அரசில் கைகோர்த்துள்ளார்கள்.

அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை; எதிரியும் இல்லை என்பதைப் போல தேர்தல் காலத்தில் பொது அணியில் உள்ளவர்களை கடுமையாக சாடியவர், இன்று மைத்திரியின் தேசிய அரசில் வீரர்களாக வீற்றிருக்கின்றார் கள். அதில் முக்கியமானவர் முன்னாள் உயர்கல்வி அமைச்சர். பல்கலை மாணவர்களுக்கு வகுப்புத் த்டை விதித்து, அவர்களை சிறைக்குள் தள்ளியதுடன். இலங்கையில் இலவசக் கல்வியை இல்லாதொழித்து தனியார் கல்வியை கொண்டுவர துடித்தவர். அதுமட்டுமல்லாமல் மகிந்த அரசை வீழ்த்தத் துடித்தவர்களில் ஒருவரான, முன்னாள் ஜனாதிபதியான சந்திரிக்காவை நிர்வாணமாக்கி வீதியில் இழுத்துச் செல்ல வேண்டும் என்று பகிரங்கமாகக் கூறிய ஒருவர். 1999ஆம் ஆண்டு தேர்தல் மோசடியானது. அப்போது தேர்தல் தொடர்பிலான பொறுப்புக்கள் எனக்கே வழங்கப்பட்டிருந்தது. எனக்கு தெரியும் என்ன செய்தேன் என்று, அது நீதியான தேர்தலா? இல்லை. ஊழல் மோசடிகள் நிறைந்தது. உயிரிழந்தவர்களின் வாக்குகள் போடப்பட்டன. ஊரில் இல்லாதர்களும் வாக்களித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியினர் வாக்குச் சாவடிக்குள் வரவிடாது துரத்தினோம். வாக்குச் சாவடிகளில் ஐக்கிய தேசியக் கட்சி

**சுகபோக வாழ்க்கை வாழ்ந்தவர்கள் திடீரென அனுபவித்த அனைத்து சுகபோகங்களும் பறிபோவதை விரும்ப மாட்டார்கள். அதைப் போல தான் மகிந்த அரசில் இன்ப வாழ்க்கை வாழ்ந்தவர்கள் அதை தொடர்ந்து அனுபவிக்க வேண்டும் என்பதற்காக புதிய அரசில் கைகோர்த்துள் ளார்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ஜே.வி.பி பிரதிநிதிகளை இருக்க விடவில்லை. நாங்கள் அடித்து துரத்தினோம். 1999ஆம் ஆண்டில் வாக்கு கொள்ளை மேற்கொள்ளப் பட்டது. அவ்வாறு இல்லையென்றால் சந்திரிக்கா வெற்றியீட்டியிருக்க முடியாது.

நல்ல முறையில் சேவையாற்றி தேர்தலை வெற்றியீட்டினோம் என சந்திரிக்கா கூறினார். அவ்வாறு நாங்கள் தேர்தலில் வெற்றியீட்டவில்லை. என்னால் மோசடி செய்யப்பட்ட போலி வாக்குகள் 49 வீதமும், தற்கொலைத் தாக்குதலில் கண்ணுக்கு ஏற்பட்ட காயத்திற்கு 2 வீதமான வாக்குகளும் மொத்தமாக 51 வீத வாக்குகளை நீங்கள் பெற்றுக் கொண்டீர்கள் என நான் சந்திரிக்காவிடம் கூறினேன் என்று பகிரங்கமாக கூறினார். அது மட்டுமல்ல வடமாகாணசபையோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்போ கேட்பது போல, காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை அவர்களுக்கு வழங்க முடியாது. அப்படி வழங்கினால் அது ஐரோப்பாவில் இருந்து செயற்படும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குச் சாதகமாகவும் அவர்கள் புத்துயிர் பெறவும் துணையாகிவிடும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு கேட்பதை அவர்களிற்கு வழங்க முடியாது. வடமாகாணசபை கேட்பதையும் வழங்க முடியாது. இப்படிக்

மைத்திரியின் நூறு நாள் வேலைத்திட்டம் முடிவடைய இன்னும் முப்பது நாள்களே இருக்கின்றன. இதுவரை எதையும் பெரிதாகச் சாதிக்காத நிலையில் மஹிந்த அரசிலுள்ள சிலர் மைத்திரி பக்கம் சாய்ந்துள்ளமையால், தற்போதைய ஆளும் கட்சிக்குள்ளும் ஒரு பிளவு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நிலையில் பொதுத் தேர்தல் ஒன்றை மைத்திரி தலைமையிலான அரசு எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்ற கேள்வி எழுந்துள்ளது. அதாவது சுதந்திரக் கட்சியின் பெரும்பாலானவர்கள் மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். அதற்கான வேலைத்திட்டத்திலும் ஈடுபட்டுவருகின்றனர். ஸ்ரீலங்கா சுநத்திரக் கட்சியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கான அலை வலுக்கத் தொடங்கியுள்ளது.

சுதந்திரக் கட்சி அறிவித்திருந்தது.

அண்மையில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுரபிரியதர்சன யாப்பா இது பற்றி எச்சரிக்கை விடுத்திருந்தார். இவ்வாறான ஒரு பின்னணியில் நுகேகொடை, கண்டி ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டத்தை விடவும் பெரும் எண்ணிக்கையிலான சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற



உறுப்பினர்கள் இறுதியாக இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்றுள்ளமை மஹிந்தவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வருவதற்கான முழு ஏற்பாடாகவே காணப்படுகிறது.

சுதந்திரக் கூட்டமைப்பில் பிரதமர் வேட்பாளராக நியமிக்கப்படக் கூடிய ஒரே ஒரு தலைவர் மஹிந்தவே. அவரைத் தவிர யாரை நிறுத்தினாலும் தோல்வியே. ஏன் என்றால் சிங்கள மக்களின் மனங்களில் தற்போதும் மஹிந்தவே ஜனாதிபதியாக வாழ்ந்து வருகிறார். இது மைத்திரிக்கும் தெரியும். இதன் காரணமாகவே மஹிந்த குடும்பத்தின் மீதான ஊழல்கள் இன்றுவரையும் விசாரணை செய்யப்படவில்லை

ஆனால் மீண்டும் மஹிந்த அரசியலுக்குள் வருவதை மைத்திரி விரும்பவில்லை. இதன் காரணமாக மஹிந்தவின் தீவிர விசிவாசிகளுக்கு பதவி ஆசை காட்டி, மஹிந்,க்கு இருக்கும் ஆதரவை குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். அதில் வெற்றியும் பெற்றுள்ளார் என்று தான் கூறவேண்டும்.

**பொதுத் தேர்தல் ஒன்றை மைத்திரி தலைமையிலான அரசு எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்ற கேள்வி எழுந்துள்ளது. அதாவது சுதந்திரக் கட்சியின் பெரும்பாலானவர்கள் மகிந்தவை பிரதமர் வேட்பாளராக நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். அதற்கான வேலைத் திட்டத்திலும் ஈடுபட்டுவருகின்றனர். ஸ்ரீலங்கா சுநத்திரக் கட்சியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கான அலை வலுக்கத் தொடங்கியுள்ளது.**

கூறியவர்கள், இன்று மைத்திரி அரசில் உள்ளார்கள். அடுத்ததாக பவித்திரா வன்னியாராச்சி. இவரும் மகிந்தவின் தீவிர விசுவாசியாக இருந்து பொது எதிரணியைக் கடுமையாக சாடியவர். மகிந்தவின் வெற்றிக்காக தான் குடியிருந்த வீட்டையே பரிசாக வழங்குவதாக அறிவித்தவர். அடுத்தாக பீலிக்ஸ் பெரேரா, மஹிந்த யாப்பா, றெஜினோல்ட் கூரே, விஜிதமுனி சொய்சா, லக்ஷ்மன் யாப்பா, மஹிந்த அமரவீர, மஹிந்த சமரசிங்க. போன்றோர் அடைக்கலம் அடைந்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் மஹிந்தவின் தீவிர விசுவாசிகள். இவர்கள் அனைவரும் மைத்திரி அரசில் இடம்பெற்றுள்ளமை சற்று யோசிக்க வேண்டிய விடயமே.

இரத்தினபுரியில் மஹிந்தவை பிரதமராக்கும் நோக்கில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 28 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர். குறிப்பாக விமல் வீரவன்ச , வாசுதேவ நாணயக்காரவின் தலைமையிலான புதிய இடதுசாரி முன்னணி, தினேஸ் குணவர்தனவின் தலைமையிலான மஹஜன ஐக்கிய முன்னணி கட்சி ஆகியன இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. இதேவேளை, வேறும் கட்சிகள் ஒழுங்கு செய்யும் கூட்டங்களில் பங்கேற்கக் கூடாது எனவும், அவ்வாறு பங்கேற்றால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஸ்ரீலங்கா

# திறக்கும்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்களிடம் வெளிப்படையாகவே வெளியிட்டிருக்கின்றார். 'சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷக்களிடமிருந்து மீட்டெடுத்து

பண்டாரநாயக்கக்களிடம் வழங்குதல்' என்ற கோசத்தை தேர்தல் காலத்தில் மைத்திரிபால சிறிசேன முன்வைத்தாலும், தேர்தலின் பின்னரான காலத்தில் 'சிறிசேன'க்களின் கைகளிலும் சுதந்திரக் கட்சி இருந்தது என்ற வரலாற்றை பதிவு செய்வது தொடர்பில் அவர் விட்டுக்கொடுப்பின்றி செயற்படுகின்றார்.

இன்னொரு மகா சிக்கல் இருக்கின்றது. அது, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஊழல் பெருச்சாளிகளாக இருந்தவர்களை இன்னமும் கட்சிக்குள் வைத்துக் கொண்டு பொதுத் தேர்தலை எதிர்கொண்டால் பாரிய வீழ்ச்சியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்கிற உண்மை.

அப்படியான நிலையில், இந்தப் பொதுத் தேர்தலை தன்னுடைய வெற்றிக்கான பிரதான இலக்காகக் கொள்ளாமல் ஊழல் பெருச்சாளிகள் மற்றும் தனக்கு அடங்காமல் இருக்கும் முக்கியஸ்தர்களை வெட்டி வீழ்த்தும் களமாக கையாள மைத்திரிபால சிறிசேன முயற்சிக்கின்றார். அதன்போக்கில் தான், அவரும் நாடாளுமன்றத்தை ஏப்ரல் மாதத்தில் கலைப்பது தொடர்பில் குறிப்பிட்டளவு ஆர்வத்தைக் காட்டுகின்றார்.

பௌத்த சிங்களப் பெரும்பான்மை மக்களின் சிறு கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன எதிர்நோக்கும், சிக்கல்கள் என்பன வேறு மாதிரியானவை. பொதுத் தேர்தலொன்று நடத்தப்பட்டால் அது, ஐக்கிய தேசியக் கட்சியை பெரும்பான்மையாக கொண்ட (தேசிய) அரசாங்கமொன்றை அமைக்கும் சூழலினை உருவாக்கும்.

அது, மேற்குநாடுகள் சார்ப்புள்ளதாக இருக்கும் என்பது. இது, ஜாதிக ஹெல உறுமயவுக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் எரிச்சலூட்டக் கூடியது. ஆனால், மக்கள் விடுதலை முன்னணி பொதுத் தேர்தலொன்றின் அவசரத்தை குறிப்பிட்டளவு வலியுறுத்துகின்றது.

அது, நாடாளுமன்றத்துக்குள் தன்னுடைய பலத்தினை இன்னும் அதிகப்படுத்திக் கொள்ள உதவும் என்பதன் போக்கிலாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகளும் பொதுத் தேர்தலினை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்கின்றன.

தேர்தல் முறை மாற்றம் தங்களுக்கு இழப்புக்களை வழங்கிவிடுமோ என்கிற அச்சம் மாத்திரமே சிறுபான்மைக் கட்சிகள் பலவற்றுக்கு இருந்தது. ஆனால், அதற்கான சூழல் இப்போது இல்லை என்கிற நிலையில், பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றன.

அதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க ஆரம்பித்துவிட்டன. மக்கள் சந்திப்புக்கள், தேர்தல் காரியாலயங்களின் திறப்பு என்று பரபரப்பான தேர்தல் நடவடிக்கைகளை நோக்கி சிறுபான்மைக் கட்சிகள் செயற்பட ஆரம்பித்துவிட்டன.

ஜனாதிபதித் தேர்தல் எனும் சதுரங்க ஆட்டம் வழங்கிய களைப்பே மக்களுக்கு இன்னும் நீங்கியிராத நிலையில் இன்னொரு தேர்தலா என்கிற சலிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால், மக்களின் சலிப்பை அதிகாரத்துக்காக போட்டியிடுபவர்கள் அவ்வளவு கருத்தில் கொள்வதில்லை. வாக்குகளை மாத்திரம் வழங்கிவிட்டு நீங்கள் உறக்க நிலைக்கு செல்லுங்கள் எனும் வகையிலான மறைமுக ஆணையை தேர்தல்களினூடு வழங்குகின்றனர்.

வரப்போகும் பொதுத் தேர்தலையும் அதிகாரத்துக்கான போட்டியாளர்கள் அப்படித்தான் கையாளப் போகின்றார்கள். ஆட்சி மாற்றங்கள் சில நல் மாற்றங்களை மாத்திரமே சாத்தியமாக்கியிருக்கின்றன.

அந்த நல்மாற்றங்கள் காலப்போக்கில் கரைந்து மீண்டும் சதிராட்டக்காரர்கள் அதிகாரங்களை கையிலெடுக்கும் சூழல் உருவாகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது மக்களின் பெரும் பொறுப்பு. அதை, கவனத்தில் கொண்டு சலிப்பு மனநிலையைத் தாண்டி மக்கள் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது! ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரை உலகின் உச்சத்துக்கு உயர்த்திய லீ



நவீன சிங்கப்புரை உருவாக்கி, அதனை பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்ற நாடாக வளர்ச்சி பெற செய்த சிங்கப்புரின் முதல் பிரதமரான லீ குவான் யு தற்போது உலகில் இல்லை. நவீன சிங்கப்பூரின் தந்தை என அனைவராலும் போற்றப்படும் இவர் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு, சிங்கப்பூர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த சில மாதங்களாகவே நி:மோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட அவர் சிங்கப்பூரில் உள்ள தனியார் மருத்து வமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அவர் உயிரிழந்துவிட்டதாக கடந்த வாரம் வதந்திகள் பரவினாலும் 23 ஆம் திகதி அதிகாலையில் அவர் மரணமடைந்த தகவலை அந்த நாட்டு பிரதமர் அலுவலகம் அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளது.

கடந்த 1923 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பிறந்தவரான லீ குவான் யு, நவீன சிங்கப்பூரின் சிற்பி என்றும், சிங்கப்பூரின் தந்தை என்றும் அந்த நாட்டு மக்களால் கொண்டாடப்படுகிறார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக்கத்தில் அவர் வழக்கறிஞர் பட்டம் பெற்றார்.

இருபதாம் நூற்றாண்டின் சுதந்திர சிங்கப்பூரின் வரலாற்றைத் தொடங்கி வைத்தவர் லீ குவான் யு. ஆங்கிலேய அரசாங்கத்திடமிருந்து சிங்கப்பூர் விடுதலை பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்த லீ குவான் யு, பின்னர் மலேசியாவிடமிருந்து சிங்கப்பூர் பிரிந்து வருவதற்கும் நடவடிக்கை எடுத்தார்.

தனது தோழர்களுடன் சேர்ந்து தொடங்கிய மக்கள் செயல் கட்சியின் மூலம் தேர்தலில் போட்டியிட்டு சுதந்திர சிங்கப்பூர் உருவாவதற்கு ஒரு காரணியாகவும் இருந்த அவர், சுதந்திரம் பெற்ற சிங்கப்பூரின் முதல் பிரதமராகப் பதவி ஏற்றார்.

கடந்த 1959 ஆம் ஆண்டு, சிங்கப்பூரின் முதல் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட லீ குவான், தனது 31 ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் தற்போதைய நவீன சிங்கப்பூருக்கான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வித்திட்டார். இவரது ஆட்சிக் காலத்தில்தான் அதுவரை துறைமுக நகரமாக அறியப்பட்ட சிங்கப்பூர் பிரமிக்கும் வகையில் வர்த்தக நகரமாக உருமாறியது.

மிக நீண்ட காலத்துக்கு சிங்கப்பூரின் பிரதமராக இருந்த பெருமை மட்டுமல்ல, அந்த காலத்தில் ஒரு நாட்டை ஒன்றுமில்லா நிலையிலிருந்து மிக மேன்மட்டத்திற்கு உயர்த்திய பெருமையும் அவருக்குண்டு.

சிங்கப்பூரை செல்வந்த மையமாக மாற்றியதற்காக அவர் பரவலாக பாராட்டப்பட்டாலும் அவரது சர்வாதிகார ஆட்சிமுறை மீது விமர்சனங்களும் வைக்கப்பட்டன.

அரசியல் வாதிகள் முறையற்ற வகையில் சொத்துக்குவிப்பதை தடுக்க புலனாய்வு விசாரணை மையம் (Corrupt Practices Investigation Bureau)CPIB ஒன்றை ஏற்படுத்தினார்.

அரசை ஏமாற்றிய அரசியல்வாதிகள் தண்டிக்கப்பட்டனர். அவர்களின் சொத்தும் அவர்களைச் சார்ந்தோரின் சொத்துகளும் கண்காணிக்கப்பட்டன.

எல்லா மக்களும் தங்கள் சொத்துக் கணக்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டும்.

மூன்று மாதத்தில் எல்லோருக்கும் ஒரு ஐ.டி எண் வழங்கப்பட்டது. உங்கள் அட்டையின் வண்ணம் கூட உங்களின் சமூக நிலையைக் கூறிவிடும்; அரசியல் வாதிகளின் வழக்கமான 'பினாமி' இல்லாது ஒழியும்.

அரசின் கட்டளைகளை மீறும் அரசியல்வாதிகள், அவர்களது ஒட்டிய உறவினரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். இரு குழந்தைகள் போதும்.· அதற்கு மேல் மக்கள் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். மூன்று நான்கு குழந்தைகள் உள்ளோருக்கு அரசியல் சலுகைகள் குறைக்கப்படும்.

இரண்டாவது குழந்தைப்பேறுக்கு தனி விடுமுறை கிடையாது. இரண்டாவது குழந்தைக்கு மேல் குழந்தை பெறுவோரின் சம்பளத்தில் ஓராண்டிற்குரிய ஊக்கப் பணம் குறைக்கப்படும். இரு குழந்தைகளுக்கு மேல் பிள்ளை பெற்றோர் பெரிய சமுதாயப் பொறுப்புள்ள பதவிகளைப் பெற முடியாது என்பன உள்ளிட்ட பல திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

லீ குவான் யு பிரதமர் ஆட்சியில் இருந்து விலகிய பின்னரும் சிங்கப்பூரின் மிக முக்கியமான அரசியல்வாதியாக திகழ்ந்தார். 2004 முதல் 2011 வரை இவருக்காகவே உருவாக்கப்பட்ட மதியுரை அமைச்சர் பதவியில் பணியாற்றினார்.

இந்த ஆண்டு 50ஆவது சுதந்திர தினத்தை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று தன் நாட்டு மக்களுக்கு உத்தரவிட்டிருந்தார் லீ. ஆனால் லீ மரணத்துக்கு சிங்கப்பூர்வாசிகள் தற்போது கண்ணீர் அஞ்சலி செலுத்திக்கொண்டிருக்கின்றனர்.

சிங்கப்பூரின் மீதும் அதனை வழி நடத்திய லீ மீதும் மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். லீயின் ஆட்சியின் கீழ் சிங்கப்பூர் பிரமிக்க த்தக்க வளர்ச்சி கண்டது.



**“ அடக்குமுறை ஆட்சியோ ஜனநாயகமோ... முப்பது ஆண்டுகளில் இவரது தலைமைத்துவம் சிங்கப்பூர் என்னும் பிரிட்ஷாரும் மலேசியர்களும் விட்டுச் சென்ற எள்ளி நகையாடப் படக்கூடிய சின்னஞ்சிறு தீவை உலகமே எட்டிப் பார்த்துப் பிரமிக்கும் தனகென்ற உரத்த குரல் கொண்ட நாடாக மாற்றியமைத்தார் என்பதே மிகையற்ற உண்மை. சிங்கப்பூரின் வளர்ச்சிக்கும் மேம் பாட்டுக்கும் வாழ்நாள் முழுவதும் உழைத்த ஒப்பற்ற மாமனிதர் அவர். ”**

இன்று சிங்கப்பூரில் தமிழ் மொழி செழித்திருப்பதற்கும் மூல காரணம் லீயின் இரு மொழிக் கொள்கைதான். அந்தக் கொள்கையால்தான் தமிழ் இங்கு இவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதற்குத் தமிழர்கள் அனைவரும் அவருக்கு நன்றிக்கடன் பட்டுள்ளனர்.

அவருக்கு வரலாற்றில் அழியா இடம் உண்டு. மக்கள் இதயத்திலும் இடம் உண்டு. வாழ்வில் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டிய மனிதர் லீ குவான் யூ.

லீ எதையுமே கடமைக்காகச் செய்ய வில்லை. நாட்டு நிர்மாணத்தில் அவர் ஆற்றியிருக்கும் அளப்பரிய பங்கை யாராலும் மறுக்க முடியாது.

சிங்கப்பூர் மலேசியாவை விட்டுப் பிரிந்தபோது அப்போதைய பிரதமர் லீ குவான் யூ மிகவும் வருத்தமடைந்தார். பிரிவுக்கு பல காரணங்கள் உண்டு. அதில் முக்கியமானவர் லீ.

மலேசியா மலேசியர்களுக்கே என்ற கொள்கையின்படி அனைத்து இன மக்களும் ஒரே மாதிரியாக சமமாக நடத்தப்பட வேண்டும் என்று அந்நாடு விரும்பியது.

சிங்கப்பூர் சுந்திரமடைந்த பின்னர் சீன இனத்தவர்கள் பெரும்பான்மையில் இருக்கும் நாடு என்பதால் சிறுபான்மையினர் ஒதுக்கப்படுவர் என்ற அச்சம் இருந்தது. ஆனால் லீ சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதமாக சிறுபான்மையினர் உரிமைகளைக் காப்பதற்காக ஒருமன்றத்தை அமைத்தார்.

1954 இல் மக்கள் செயல் கட்சி தொடங்கிய நாளிலிருந்து சிங்கப்பூர் பல இன, பல கலாசார, பல சமயங்கள் கொண்ட நாடாக இருப்பதை லீ உறுதி செய்தார்.

சிங்கப்பூரில் அரசாங்கத்திலும் தனி யார் துறையிலும் பல உயர் பதவிகளில் இந்தியர்கள் இருந்து வருகின்றனர். இந்த நாட்டில் தமிழ் அதிகாரத்துவ மொழிகளில் ஒன்றாக உள்ளது.

பாடசாலைகளிலும் ஊடகங்களிலும் தமிழ் புழக்கத்தில் உள்ளது. தைப்பூசமும் தீபாவளியும் அரசாங்கத்தின் பேராதரவுடன் கொண்டாடப்படுகின்றன. சுதந்திர சிங்கப்பூர் எப்படி இருக்க வேண்டும் என்ற லீயின் கனவை இவை பிரதிபலிக்கின்றன.

லீ குவான் யூ ஒரு மாபெரும் தாக்கத்தின் அடையாளச் சின்னம். ஆசியப் பண்புகள் மேற்கத்திய பண்புகளைவிட வேறுபட்டவை என்று ஜனநாயக ஆட்சியின் வரைவிலக்கணத்தை மாற்றியெழுதிய பொழுதிலோ, மானுடப் பரிமாணங்கள் மரபணுக்களில் அடங்கியிருப்பதால் அறிவில் சிறந்தவர்களை ஈன்றெடுப்பதற்குப் பட்டதாரிகள் பட்டதாரிகளையே திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற சர்ச்சைக்கு ரிய கொள்கையை முன்னிறுத்திய பொழுதிலோ லீ குவான் யூவின் துணிவு தெரிந்தது.

அடக்குமுறை ஆட்சியோ ஜனநாயகமோ... முப்பது ஆண்டுகளில் இவரது தலைமைத்துவம் சிங்கப்பூர் என்னும் பிரிட்ஷாரும் மலேசியர்களும் விட்டுச் சென்ற எள்ளி நகையாடப் படக்கூடிய சின்னஞ்சிறு தீவை உலகமே எட்டிப் பார்த்துப் பிரமிக்கும் தனக்கென்ற உரத்த குரல் கொண்ட நாடாக மாற்றியமைத்தார் என்பதே மிகையற்ற உண்மை. சிங்கப்பூரின் வளர்ச்சிக்கும் மேம் பாட்டுக்கும் வாழ்நாள் முழுவதும் உழைத்த ஒப்பற்ற மாமனிதர் அவர்.

சிங்கப்பூர் என்ற தேசத்தை செதுக்கிய சிற்பியான லீ குவான் யூ, பாபாக்கள்

( 22ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக்குறியாகும் எதிர்ப்பு அரசியல்

- ஹரீஸ்



இலங்கை மிக விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றை சந்திக்கும் என்ற நிலையில் கட்சிகளுக்கு இடையில் பல குத்துவெட்டுகள் சூடு பிடித்து வருகின்றன. இலங்கை அரசியலில் மிகப்பெரும் செல்வாக்கினை செலுத்தி வந்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியன இணைந்து இப்போதைய ஆட்சியை அமைத்திருக்கும் நிலையில், புதிய எதிர்கட்சி ஒன்றின் வரவு இலங்கை அரசியலுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. ஏற்கனவே மஹிந்த அரசாங்கம் அமைச்சுப் பதவியைக் காட்டி எப்படி ஐ.தே.க.வைச் சரிய வைத்ததோ அதன் முக்கிய உறுப்பினர்களை வலைக்குள் வீழ்த்தியதோ அதே தந்திரத்தை தான் புதிய அரசாங் கமும் கைக் கொள்கிறதா என்ற சந்தேகம் எழுகின்றது. ஏற்கனவே மஹிந்த ஜனாதிபதியாக பதவி வகித்த போது அங்கு ஒட்டி இருந்து அமைச்சுப் பதவியை அனுப வித்தவர்கள் இப் போது மைத்திரியு டனும் எப்படி ஒட்டுவதற்கு என்ன வியூகம் என்று யோசித்துக் கொண்டி ருக்கின்றனர். சிலர் ஒட்டி அமைச்சு பதவிகளையும் பெற்றும் விட்டனர். சிலரோ கட்சி கட்டுப்பாடு களுக்கு அப்பால் இயங்கத் தொடங்கி விட்டனர். இந்த உடைவு சுதந்திரக்கட்சியை பிளவுறச் செய்யும் என்ற தோற்றப் பாட்டை உருவாக்கியிருக்கிறது.

அனுபவித்தவர்கள் மறுபக்கத்தில் எதிர்கட்சித் தலைவர் யார் என்ற குரல்கள் இன்னும் உக்கிரம் பெற்றிருக் கின்றன. முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என்று ஒரு தரப்புக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறது. அவர் பிரதமர் ரணிலின் பள்ளித் தோழன் என்றும் ஆகவே தினேஸை நியமித்தால் நல்லது என்ற கதைகளும் அடிபடத் தொடங்கிவிட்டன. மறுதரப்போ முன்னாள் அமைச்சர் நிமால் உட்பட சிலரின் பெயரைப் பிரேரித்து வருகின்றது. இன்னொரு தரப்புகள் சிறுபான்மை இனத்தவரின் கட்சியான தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை நியமித்தால் என்ன என்ற தொனியிலும் கருத்து வெளியிட்டு வருகின்றன.

எனவே எதிர்க்கட்சி தலைமை ஆசனத்தில் யார் உட்கார போகிறார்கள் என்ற வினா மக்கள் மத்தியில் எழத் தொடங்கி விட்டது. எதிர்கட்சி பலமான ஒரு கட்சியாக அமைய வேண்டும் என்பதற்கு அப்பால், தனிப்பட்ட சிலரின் பெயர்களை பிரேரிப்பது சிறந்த ஜனநாயக ஆட்சிக்கான அத்திவாரமாக ஒருபோதும் அமையாது.

ஒரு நாட்டில் ஜனநாயகம் உரிய முறையில் வெற்றி பெற வேண்டுமாயின், பலமான எதிர்கட்சி இன்றியமையாத ஒன்றாகும். ஆளும் தரப்பும் வழி மாறிப் பயணிக்கும் போதோ நாட்டில் மக்களின் அடிப்படை பிரச்சனைகள் தீர்க்கப்படாத போதோ அல்லது நாட்டில் அடக்குமுறை த்லைவிரித்தாடும் சூழ் நிலை ஏற்படும் போதோ அதற்கெதிராகக் குரல் எழுப்பி ஆளும் தரப் புக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் கட்சியா கவே எதிர்கட்சி அமைய வேண்டும். வெறும் பிரதமரின் பள்ளித்தோழன் என்பதனால் அவரிடம் எதிர்கட்சி தலைமைப் பொறுப்பை கையளித் தால், இரு கட்சி ஆதிக்க முறை கொண்ட எமது நாடு ஒருகட்சி ஆதிக்கமுறை கொண்ட நாடாகவே மாற வாய்ப்புண்டு.

இந்த நிலையில், யாரை அந்தப் பதவியில் உட்கார வைக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது. மஹிந்த அரசில் அமைச்சுப் பதவிக்காக ஜால்ரா போட்டவர்கள் எதிர்கட்சித் தலைவர் ஆசனத்துக்கு பொருத்தமானவர்களா?

**ஒரு நாட்டில் ஜனநாயகம் உரிய முறையில் வெற்றி பெற வேண்டுமாயின், பலமான எதிர்கட்சி இன்றியமையாத ஒன்றா கும். ஆளும் தரப்பும் வழி மாறிப் பயணிக்கும் போதோ நாட்டில் மக்களின் அடிப்படை பிரச்சனைகள் தீர்க்கப்படாத போதோ அல்லது நாட்டில் அடக்குமுறை தலைவிரித்தாடும் சூழ் நிலை ஏற்படும் போதோ அதற்கெதிராக் குரல் எழுப்பி ஆளும் தரப் புக்கு அழுத்தத்தை கொடுக்கும் கட்சியாகவே எதிர்கட்சி அமைய வேண்டும். வெறும் பிரதமரின் பள்ளித்தோழன் என்பத னால் அவரிடம் எதிர்கட்சி தலைமைப் பொறுப்பை கையளித்தால், இரு கட்சி ஆதிக்க முறை கொண்ட எமது நாடு ஒருகட்சி ஆதிக்க முறை கொண்ட நாடாகவே மாற வாய்ப்புண்டு.**

அவர்கள் மீண்டும் எதிர்கட்சித் தலைமைப்பொறுப்பை ஏற்றால் நாட்டின் எதிர்ப்பு விமர்சன அரசியலைக் கொண்டு நடத்துவதற்கான ஆளுமையை உடையவர்களா? என்ற சந்தேகம் எழுகின்றது. ஒரு வேளை மைத்திரிக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை கிடைத்தால் சர்வ வல்லமையுடன் ஆட்சிக்கட்டி லில் அமரலாம் என்பதே எதிர்பார்ப்பாகும். மைத்திரி அரசை விமர்சிக்கவோ, தவறுகள் விடும் போது சுட்டிக்காட்டியும் ஆளுமையை எதிர்கட்சியும், எதிர்கட்சி தலைமையும் கொண்டிருக்க வேண்டும். அதுவே ஜன நாயகத்தை விரும்பும் மக்களின் எதிர்பார்ப்பாகும். ஆனால் நிகழ்கால அரசியலில் அதற்கான வாய்ப்புகள் அசாத்தியமாகவே இருக்கிறது.

இலங்கையின் அரசியலில் என்றுமே இல்லாத அளவுக்கு ஒட்டவே முடியாது என்று கருதப்பட்ட இருகட்சிகள் இணைந்து ஆட்சியை அமைத்திருக்கின்றன. இந்தக் கட்சிகளின் பெரும்பான்மையான தலைவர்கள் ஆளும் மைத்திரி அரசுடன் கூட்டிணைந்திருக் கின்றனர். தேசிய அரசொன்றை ஸ்தாபிக்க, ஒன்றிணைந்திருக்கிறோம் என்பது பதவி ஆசையை மறைக்கக் கூறிவரும் காரணமாகவே இருக்கின்றது.

இந்த நிலையில் மூன்றாவது பலமிக்க கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பே இருக் கிறது. இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் எதிர்கட்சித் தலைமைப்பதவி போகுமாக இருந்தால், தென்னிலங்கை சிங்கள தலைமையின் எதிர்ப்பு அரசியலையும் அவர்கள் கொண்டு நடத்த நேரிடும். அதாவது இதுவரை காலமும் தமது எதிர்ப்பு அரசியலில் தமிழர்களின் இனப்பிரச்சினையை முன்னிறுத்தி வந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பு மொத்த இலங்கை வாழ் மக்களின் எதிர்புக் குரல்களையும் வழிப்படுத்த வேண்டிய கடப்பாட்டுக்குள் தள்ளப்படுவார்கள்.

ஒரு பக்கத்தில் தமக்கு வாக்களித்த மக்களுக்காக குரல் எழுப்புவதோடு அதற்காக ஆளும் தரப்புடன் பேரம் பேசல்களை மேற்கொள்ள வேண்டும். சில நேரங்களில் இப்போது கூறுவது போல வெளியில் இருந்து ஆதரவு தருகிறோம். தீர்வைத் தாருங்கள் எனக் கோர வேண்டிய சூழலும் உருவாகும்.

அதனால் எதிர்கட்சித் தலைமை என்பது வெறும் பொம்மையாக இருக்க, ஒருகட்சி ஆதிக்க முறை கொண்ட நாடாகவே இலங்கை மாறும்.

எதிர்கால ஜன நாயகத்தை வழிப்படுத்த பலமான எதிர்க்கட்சி ஒன்றை ஸ்தாபிக்கும் பயணத்தின் ஆரம்பப் புள்ளியாக நாடாளுமன்றத் தேர்தல் அமையுமா? அல்லது பலமான எதிர்க்கட்சி இல்லாமல் தட்டிக் கேட்க ஆளில்லாத தம்பி சண்டப்பிரசண்டனாக ஆளும் கட்சி மாறுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்ம சொப்பனம்

வியாதிகளின் இருப்பிடமாக இவர்கள் மாறிப்போவதை ஏன் யாராலும் தடுக்க முடியவில்லை? அவர்களோடு சேர்ந்து விளையாடும் போதும். கதை பேசும் போதும் திடீர் திடீரென்று இப்படி ஏதாவது கேள்விகள் முளைத்துக் கொண்டே இருக்கும். தந்தை ஏஞ்சலுக்கு ஏழை - பணக்காரன் . உயர்ந்தவன். தாழ்ந்தவன் . மேல்சாதி. கீழ்சாதி போன்ற பிரிவினர்களில் நம்பிக்கையில்லாததைக் கண்டு காஸ்ட்ரோவுக்கு மகிழ்ச்சி தான். ஒரு நாள் தன் தந்தையைக் பிடித்து வைத்துக் கொண்டு தனது சந்தேகங்களை கேட்கத் தொடங்கினான்.




இவர்களுக்கு ஏன் சட்டை இல்லை? ஏன் வெறுங்காலுடன் நடந்து போகின்றார்கள்? என்னை விட நன்றாகப் படிப்பவன் கூட பள்ளியை விட்டு நின்று விடுகிறானே, ஏன்?

ஏஞ்சல் பொறுமையாக பதில் சொன்னான்.

அவர்கள் பெற்றோர் சம்பாதிக்கவில்லை. ஏழைகள் எனவே சட்டை செருப்பு வாங்க காசில்லை. சாப்பிடவே காசில்லை எனும் போது எப்படிக் குழந்தைகளை படிக்க வைக்க முடியும்.

அவர்கள் ஏன் ஏழைகளாக இருக்கிறார்கள்?

எல்லாம் கடவுள் செயல். அவர்களால் அப்படித் தான் இருக்க முடியும்.

அவர்களில் பலர் நம் பண்ணைகளில் தானே வேலை செய்கிறார்கள். பிறகு ஏன் காசில்லை.

தந்தை சிறிது யோசித்து விட்டு பின் சமாளித்தார்.

அவர்களுக்கு கிடைக்கும் கூலி அவ்வளவு பணம்?

நமக்கு மட்டும் ஏது இவ்வளவு பணம்?

அவை நம் நிலம். எனவே நமக்கு நிறையப் பணம். வேலை செய்பவர்களுக்கு குறைவாகத் தான் கிடைக்கும்.

நமக்கு எப்படி இவ்வளவு நிலம் கிடைத்தது.

நான் பணம் கொடுத்து சட்டப்படி வாங்கினேன்.

ஆனால் அவர்கள் தானே அதிகமாக வேலை செய்கிறார்கள். இருந்தும் ஏன் அவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். அதற்கு மேல் அவரால் பதில் சொல்ல முடியவில்லை.

இவை எல்லாம் உனக்கு வேண்டாத வேலை. நீ போய் படி.

காஸ்ட்ரோவின் ஒன்று விட்ட சகோதரர். பெட்ரோ எமிலயோ ஓரியண்ட் மாகாணத்தில் ஆதன்டிக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டார். தனது சகோதரருக்கு ஒட்டு பிரசாரம் செய்யும் பணம் காஸ்ட்ரோவிடம் ஒப்படைக் கப்பட்டது. அப்போது காஸ்ட்ரோவுக்கு 14 வயது. பைரனில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று எப்படி வாக்களிக்க வேண் டும் என்று எடுத்துக் கூற வேண்டியது அவன் பொறுப்பு. பெரும்பாலனோருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. யார் யார் எந்தெந்தக் கட்சியின் சார்பாக நிற்கிறார்கள் என்பதைப் படித்துப் புரிந்து கொள்ள இயலாது. உண்மையில் காஸ்ட்ரோ இந்தப் பிரசாரத்தைச் செய்ய இயலாது. உண்மையில் காஸ்ட்ரோ இந்தப் பிரசாரத்தைச் செய்தது அவனது சகோரருக்காக அல்ல. ஒரு குதிரைக்காக. ஜெயித்து விட்டால் குதிரை வாங்கித் தருவதாக காஸ் புட்ரோவுக்கு பெட்ரோ வாக்களித்திருந்தார். பிரசாரம் முடிந்தது. வெற்றி பெட்ரோ வுக்கே. காஸ்ட்ரோவுக்கு ஓர் அராபியக் குதிரை அன்பளிப்பாகக் கிடைத்தது?

காஸ்ட்ரோவின் முதல் அரசியல் அனுபவம் இது தான். இந்த அனுபவம் பின்னாளில் காஸ்ட்ரோவுக்கு சில கசப் பான உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியது. தேர்தல் என்றால் என்ன என்பதை காஸ்ட்ரோ புரிந்து கொண்டான். மக்கள் தாமாகவே முன் வந்து தமக்குப் பிடித்த தலைவனை தேர்ந்தெடுக்கும் முறை யாக தேர்தல் நடைபெறவில்லை. அரசாங்கத்துக்கு ஆதரவான வாக்களார்கள் ஓரணியிலும் எதிரான வாக்காளர்கள் மற்றொரு அணியிலும் திரட்டப்பட்டனர். முதல் பிரிவினரின் வாக்குகள் மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டன. அனைத்து வாக் குச் சாவடிகளிலும் இதே நிலைமை தான். அடிதடி கலவரம் எல்லாம் சர்வ சாதாரணம். குறிப்பாக கிராமப்புறங் களில் நிலைமை படுமோசம். அத்து மீறல் கள் மிகக் கடுமையாக இருந்தன. மக்க ளைப் பாதுகாக்க வேண்டிய இராணு வம் மக்களுக்கு எதிராக திருப்பப்பட்டி ருந்தது. காஸ்ட்ரோபெலன் கல்லூரியில் படித்த நான்காண்டுகளில், அதாவது 1940 முதல் 1945 வரையிலான கால கட்டத்தில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. இஃபுல்ஜென்ஸ் பாடிஸ்டப க்யூபாவின் குடியரசுத் தலைவரானார். அமெரிக்கா வில் பிராங்கனின் டி ரூஸ்பு வெல்ட் நான்காம் முறையாக மீண்டும் அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

(தொடரும்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 666

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | 6 |
| 7 | | | | | 8 | | |
| 9 | | | 10 | 11 | | | |
| | | 12 | | | | 13 | |
| 14 | 15 | | | 16 | 17 | | |
| | 18 | | | | 19 | | |
| 20 | | | | 21 | | 22 | 23 |
| 24 | | | 25 | | | | |

### மேலிருந்து கீழ்

1 - தேனிசைப்பா தரும் புலவன்.
2 - உண்ணா நோன்பின் மகத்துவத்தை உணர்த்தியவர்.
3 - சில தானியங்கள், பழங்கள் போன்றவற்றை நொதிக்க வைத்துத் தயாரிக்கப்பட்ட பானம்.
4 - ஒரு சங்ககாலப் புலவன்.
5 - ஒரு கணிதக் குறியீடு.
6 - திவ்விய சித்தம்.
8 - நல்ல.
11 - அழகிய பெண்.
12 - மடல்.
13 - பக்கத்து வீட்டுக்காரன்.
15 - நல்லை நகர் தந்த மாணிக்கம்.
17 - முனிவன்.
20 - தோழன்.
21 - ஒரு வள்ளல்.
23 - ஒரு தானிய வகை.

### இடமிருந்து வலம்

1 - பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாசியில் வரும் இந்துக்களின் புனித தினம்.
5 - தீய செயல்களுக்கான மறைமுகத் திட்டம்.
7 - ஒரு வகைப் பேரிகை.
8 - தள்ளிப்போ.
9 - மன்மதன் காதலி.
10 - சீதை புத்திரன்.
12 - திருமணமாகாப் பெண்.
13 - ஒன்றை அளவெடுக்கும் படி உத்தரவிடல்.
14 - சிறிய நேர அளவீடு.
16 - துணிச்சல்.
18 - அழித்தல்.
19 - பலவல்ல.
20 - மனிதக்கழிவுகளில் ஒன்று.
21 - பாடல்.
22 - வாழ்.
24 - கருமேகம்.
25 - அம்மாவின் மூத்த சகோதரி

அனுப்புபவர் பெயர்:------------------------------------

விலாசம்:----------------------------------------------

------------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

போட்டி இல. 666

■ சொற்சிலம்பம் போட்டி 666ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, ஏப்ரல் 22 மற்றும் ஏப்ரல் 29ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக் கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

### பாராட்டுப் பெறுவோர்

**தா.சிறீதரன்,**
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

**கே. இராஜகோபால்.**
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**செ.சின்னத்துரை,**
இல - 131- D-10,
உருத்திரபுரம்.

**ஜ.விஜயபாலன்,**
இல-7 நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**திருமதி.த.இராசதேவி,**
தசபவனம், சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

### போட்டி இல 663இல் பரிசு பெற்றோர்

1. **செ.துகராஜ்,** பாலிநகர், வவுனிக்குளம், மல்லாவி.
2. **க.குலசிங்கம்,** 5ஆம் வட்டாரம், நயினாதீவு.
3. **வ.ஆ. அதிரூபசிங்கம்,** அம்மன்கோவிலடி, வல்வெட்டித்துறை.

**மேலிருந்து கீழ்**

1. விநாசம்.
2. வாகரை.
3. திரி.
4. அம்மா.
5. சாசனம்.
6. மையம்.
8. கசகசா.
12. தாரம்.
13. சற்று.
15. உயர்வு.
16. கவலை.
17. விரும்பு.
19. தனம்.
20. பாகு.
21. வதி.

**இடமிருந்து வலம்**

1. விவாதி.
4. அஞ்ஞானம்.
7. நாகரிகம்.
9. சயா.
10. சரை.
11. சமாதானம்.
13. சக.
14. ரம்.
15. உற்சாகம்.
18. பயறு.
19. தரு.
20. பாலைவனம்
22. சவுக்கு.
23. திம்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் முதல் முழுமையான உடல் உறுப்பு வளர்த்து சாதனை

முழுமையான, செயற்படக்கூடியதொரு உடல் உறுப்பை ஒரு விலங்கின் உடலுக்குள்ளேயே வளர்த்து செயற்பட வைப்பதில் ஸ்கொட்லாந்து விஞ்ஞானிகள் வெற்றிபெற்றிருக்கிறார்கள். இத்தகைய முயற்சி வெற்றி பெறுவது உலக அளவில் இதுவே முதல்முறையா: கருதப்படுகிறது.

மருத்துவர்கள் உருவாக்கிய கழுத்துக்கணையம். ஆங்கிலத்தில் தைமஸ் என்று அழைக்கப்படும் கழுத்துக்கணையம் என்பது உடலின் முக்கிய உறுப்பு. மனிதர்களுக்கு இது இதயத்துக்கு மேலே கழுத்துப்பகுதிக்கு கீழே அமைந்திருக்கும். இரண்டு பிரிவாக இருக்கும் இந்த கழுத்துக்கணையம் மனிதர்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியமானது. காரணம் இந்த கழுத்துக்கணையத்தில் தான் மனிதர்களின் நோய் எதிர்ப்புத்தன்மைக்கு மிக மிக அவசியமான டி செல்கள் முதிர்ச்சியடைந்து ஒட்டுமொத்த உடலுக்கும் பரவுகின்றன. இந்த டி செல்கள் தான் மனித உடலின் நோய் எதிர்ப்பு சக்திக்கான அடிப்படைக் கவசமாகச் செயற்பட்டு. மனித உடலுக்குள் புகமுயலும் எல்லாவிதமான நோய்க்கிருமிகளையும் தடுத்து தாக்கி அழிக்கின்றன.



இப்படிப்பட்ட கழுத்துக்கணையத்தைத்தான் ஸ்கொட்லாந்தின் எடின்பர்க் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஒரு விலங்கின் உடலுக்குள் செயற்கையாக உருவாக்கியிருக்கிறார்கள். முதல்கட்டமாக எலியின் கருப்பையில் இருக்கும் சிசுவின் உயிர்க்கலன்களை பிரித்தெடுத்த விஞ்ஞானிகள், அவற்றை தைமஸ் எனப்படும் கழுத்துக்கணையத்தில் இருக்கும் உயிர்க்கலன்களைப்போல மாற்றி அமைத்தார்கள். இந்த உயிர்க்கலன்களுடன் கழுத்துக்கணையத்தில் இருக்கும் மற்ற துணை உயிர்க்கலன்களுடன் இணைத்து. இந்த எல்லா உயிர்க்கலன்களையும் மீண்டும் எலியின் உள்ளே கொண்டுபோய் பதிய வைத்தனர்.

இப்படி பதியப்பட்ட தனித்தனி செல்கள் ஒன்றாக சேர்ந்து புத்தம்புது கழுத்துக்கணையமாக உருவெடுத்தன. இப்படி உருவான கழுத்துக்கணையம் இயற்கையான கழுத்துக் கணையத்தைப்போல டி செல்களை உற்பத்தி செய்து இயங்கவும் தொடங்கியது விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது.

கடந்த ஆண்டு விஞ்ஞான கூடத்தில் மனித மூளையை வளர்க்க செய்யப்பட்ட முயற்சிகளின்போது கருவுற்ற ஒன்பது வார சிசுவின் மூளையை உருவாக்கி விஞ்ஞானிகள் செய்த அதே மாதிரியான சாதனை மற்றும் உடல் உறுப்புக்களின் செயற்பாட்டை இந்த கழுத்துக்கணையத்தின் உருவாக்கத்திலும் விஞ்ஞானிகள் எட்டியிருக்கிறார்கள். இந்த இரண்டு பரிசோதனைகளின் வெற்றிகளும் மனித உயிர்க்கலன்களைக்கொண்டு மனித உறுப்புக்களை தனித்தனியாக மீளுருவாக்கம் செய்யமுடியும் என்கிற நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியிருப்பதாக சொல்கிறார் இந்த ஆய்வில் பங்கேற்ற பேராசிரியை கிளேர் பிளாக்ப்ர்ன்.

குறிப்பாக கழுத்துக்கணையக் குறைபாடுகளுடன் பிறந்த குழந்தைகள் மற்றும் எலும்பு மச்சைக்கான மாற்று ஏற்பாடுகள் தேவைப்படும் குழந்தைகளுக்கு இந்த ஆய்வின் முடிவுகள் மிகவும் நம்பிக்கையளிப்பதாக அவர் தெரிவித்தார்.

ஆனாலும் அவர் கூறும் பலாபலன்கள் மனிதர்களுக்கு எட்டவேண்டுமானால் இந்த ஆய்வு மேலும் பல படிநிலைகளைக் கடந்து வரவேண்டி இருக்கும். முதலாவது எலியின் சிசுவுக்குள் சாத்தியமான இந்த மருத்துவ சாதனை மனிதர்களிலும் சாத்தியமாகுமா என்பதில் தொடங்கி, இப்படி உருவாக்கப்படும் மனித உறுப்புக்களின் வளர்ச்சி கட்டுக்கடங்காமல் போய் அது புற்றுநோயாக உருவெடுக்குமா என்பது தொடர்பான சந்தேகங்களையெல்லாம் இந்த ஆய்வுகள் கடக்கவேண்டி இருக்கும்.

இப்படி பல தடைகளை கடக்கவேண்டியிருந்தாலும், பழுதடைந்த இயந்திரங்களின் உதிரிப் பாகங்களைக் கழற்றிவிட்டு புதிய பாகங்களை மாட்டி இயந்திரத்தை மீண்டும் இயக்குவதைப்போல பழுதடைந்த உடல் உறுப்புக்களுக்கு மாற்றாக, அதே உடலின் ஒரு சில உயிர்க்கலன்களை ஒன்றிணைத்து நினைத்த மாத்திரத்தில் தேவைப்படும் உடல் உறுப்புக்களை உருவாக்கி பொருத்திக்கொள்ள முடியும் என்கிற சாத்தியப்பாடு நினைத்துப் பார்க்க முடியாத விஞ்ஞான அதிசயமாக கருதப்படுகிறது.



# உதைத்தவரை கூட்டமாக பழிவாங்கிய நாய்கள்



*சீனாவில் உள்ள சாங்க்கிங் பகுதியில் வசித்து வரும் நபர். ஒருவர் காரில் வெளியே சென்று விட்டு தனது வீட்டுக்கு திரும்பினார். அப்போது தனது காரை நிறுத்தும் பகுதியில் நாய் ஒன்று படுத்திருப்பதைக் கண்டார்.*

*இதனால் கடுப்பான அவர், காரிலிருந்து இறங்கி நாயை எட்டி உதைத்தார். அடி வாங்கிய நாய் ஓட்டம் பிடித்தது. பின்னர் காரை அங்கு நிறுத்தி விட்டு அந்த நபர் வீட்டுக்குள் சென்று விட்டார்.*

*அதன் பிறகு தான் தொடங்கியது நாய்களின் மிரட்டும் பழிவாங்கும் நடவடிக்கை. எட்டி உதைத்தவுடன் வேகமாக ஓடிய அந்த நாய், தனது சக நண்பர்களை, தான் உதை வாங்கிய இடத்துக்கு கூட்டி வந்தது.*

*தனது சகாவைத் தாக்கியவரை ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்று 4க்கும் மேற்பட்ட நாய்கள் கார்த் தரிப்பிடப் பகுதிக்கு விரைந்து வந்தன.*

*ஆனால் கார் மட்டும் தான் இருந்தது. எட்டி உதைத்த நபரைக் காணோம். எனினும் ஆத்திரம் குறையாத நாய்கள் அனைத்தும் காரை சுற்றிவளைத்து துவம்சம் செய்தன.. காரின் 'வைப்பரை'யும் வாயால் கடித்து துப்பின.*

*இந்தக் காட்சிகளைப் படம் பிடித்த பக்கத்து வீட்டுக்காரர் அந்தக்காட்சிகளை காரை ஓட்டி வந்தவரிடம் காண்பிக்க அவர் அப்படியே ஆடிப்போனார்.*

*காரில் ஏற்பட்ட சேதங்களை பார்வையிட்ட அவர், நல்லவேளை நாம் தப்பித்தோம் என எண்ணியது குறிப்பிடத்தக்கது. இதனால் தான் நாயாக இருந்தாலும் நாகரிகமாக பழகு என்று கூறுகிறார்களோ?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரைத் தேர்வு செய்வது?

சிம்பு செல்வராகவன் யுவன் இணையும் படத்தில், இரண்டு நடிகர்கள். ஆனால் போட்டியில் இருப்பதோ த்ரிஷா, டாப்ஸி, தீக்ஷா சேத் என மூன்று நாயகிகள். கண்டிப்பாகப் படத்தில் த்ரிஷா இருப்பார் என்கிறார்கள். த்ரிஷா ஏதோ கல்யாணம் பண்ணப்போறதா சொன்னாங்களே!

# சிம்ரனுக்கும் முக்கிய வேடம்

ஜி.வி.பிரகாஷைச் சுற்றி ஒரே நாயகியர் கூட்டம். டார்லிங் படத்தில் இரண்டு நாயகிகள். த்ரிஷா இல்லைனா நயன்தாரா படத்தில் ஆனந்தி தவிர மனிஷா யாதவும் இன்னொரு நாயகியாம்.

# இஞ்சி இடுப்பழகி

இஞ்சி இடுப்பழகா பூஜையில் கலந்துகொண்ட அனுஷ்காவை எல்லோரும் அதிர்ச்சியாகப் பார்த்தனர். காரணம், அம்மணி மூன்று மடங்கு உடல் பருத்திருந்தார். காரணம், நாயகன் ஆர்யாவைக் கவர, குண்டாக இருக்கும் அனுஷ்கா இஞ்சி இடுப்பழகியாக மாற என்னவெல்லாம் முயற்சி செய்கிறார் என்பதே கதையாம். இஞ்சி மாதிரி இடுப்பு நல்லாவா இருக்கும்?





# கௌதம் மேனனின் இரண்டு படங்கள்

கௌதம் மேனன் புது உற்சாகத்துடன் அடுத்தடுத்து இரண்டு படங்களை இயக்கப் போகிறார். சிம்பு படத்தை முடித்ததும் விக்ரம், நயன்தாரா நடிக்கும் துருவ நட்சத்திரம். அடுத்து, விஷாலை இயக்கப்போகிறார் கௌதம் மேனன். ஆனால் இது ஆக்ஷன் படம் இல்லை. விண்ணைத் தாண்டி வருவாயா போல் மென்மையான காதல் கதையாம். மெல்லிசா ஒரு கோடு, கோட்டுக்கு அந்தப் பக்கம் போலீஸ் கதை, இந்தப் பக்கம் காதல் கதை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சத்யராஜுக்கு பி.ரி.மாஸ்டர் பாத்திரம்



மான்கராத்தே திருக்குமரன் இயக்கத்தில் உதயநிதி ஸ்டாலின் - எமி ஜாக்சன், சத்யராஜ் நடிக்கும் படத்துக்கு கெத்து என்று பெயர் வைத்திருக்கிறார்கள். சத்யராஜுக்கு பி.ரீ.மாஸ்டர் பாத்திரமாம். அவருடைய மகனாக நடிக்கிறார் உதயநிதி. முதுகு நிமிர்த்திருயிருப்பாங்களே ?

# நடிக்க வாய்ப்பு வருதா?

ஃபை ஃபை ஃபை பாடிய ரம்யா நம்பீசன், குக்குகு குக்குகு பாடிய லட்சுமி மேனனைத் தொடர்ந்து சுப்ரமணியபுரம் சுவாதியும் இப்போது பாடகியாகிவிட்டார். ஜெயம் ரவி நடித்துள்ள அப்பாடக்கர் படத்தில் இடம்பெறும் செம குத்துப்பாட்டு ஒன்றைப் பாடியிருக்கிறாராம் சுவாதி.





# ஆந்திர அரசியல்வாதிகள் போர்க்கொடி

அனுஷ்கா நடிப்பில் பிரம்மாண்டமான பட்ஜெட்டில் உருவாகியுள்ள ருத்ரம்மா தேவி படத்துக்கு சிக்கல் எழுந்துள்ளது. சரித்திரப் படமான இதில், தெலுங்கானாவுக்கு எதிரான வசனங்கள் இருப்பதாகக் கூறி ஆந்திர அரசியல்வாதிகள் போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள். எங்கேடா ஆரம்பிக்கலையேனு பார்த்தோம்...!

# ஐ.டியும், திகிலும் கலந்து உருவாகும் ரூகன்



ஐ.டி கம்பெனியில் வேலை செய்யும் 5 பேர்களின் எண்ணங்களை நகைச்சுவை கலந்து திகில் மற்றும் பல திருப்பங்களுடன் உருவாகிவரும் படம்தான் ரூகன்.இந்தப் படத்தின் சிறப்பம்சமாக கிராபிக்ஸ் காட்சிகள் இல்லாமல் கமரா தந்திரம் மற்றும் மேக்கப் மூலமாக திகில் காட்சிகளை எடுத்துள்ளனராம்.

யாஸ்மித், சித்து, ஷாம் கீர்த்திவாசன், பிரதீப் பாலாஜி, சாக்ஷி அகர்வால், ஆஷிஷா, தருண் சக்ரவர்த்தி, சுரேஷ் பிள்ளை, மனோஜ் ஆகிய புதுமுகங்கள் நடித்திருக்கிறார்கள். படத்தை இயக்குகிறார் கமல் குமார் .இவரே படத்தை தயாரித்து, செம்மையும் செய்திருக்கிறார்.


படத்தைப் பற்றி கமல் குமார் கூறும்போது, இந்தப்படத்தில் ஒவ்வொரு கதாபாத்திரமும் புதுசா இருக்கணும் என்பதற்காக புதுமுகங்களை வைத்து இயக்கியுள்ளேன். இப்படத்தின் ஒளிப்பதிவை ரவி ஆறுமுகம் செய்திருக்கிறார். ...ரின்ந் அரவிந்த் இசையில் 3 பாடல்கள் உருவாகியிருக்கின்றன. ...லெக்ஸ் பிரமானந்த் படத்தின் திகில் காட்சிக்கான பணியை செய்திருக்கிறார். ...தப் படத்தில் இடம்பெறும் திகில் காட்சிகள் அதிகம் பேசப்படும். இதற்காக ...றரை மாதம் மிகவும் கஷ்டப்பட்டு செய்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா?

- வரலாற்றின் தந்தை என்றழைக்கப்படுபவர் - ஹெரடோட்டஸ்
- காந்தியடிகளை முதன்முதலில் தேசப்பிதா என்று அழைத்தவர் -நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்
- ஐம்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் மலர் - கார்டஸ்
- பைபிள் முதன்முதலில் இயற்றப்பட்ட மொழி - ஹீப்ரு
- ஹரிஜன் என்ற இதழை நடத்தியவர் - காந்தியடிகள்
- உலகிலேயே கட்டாய ராணுவப் பயிற்சி அளிக்கப்படும் நாடு - இஸ்ரேல்
- நாணயங்கள் செய்யப் பயன்படும் உலோகம் - நிக்கல்
- ஜப்பான் நாட்டின் நாடாளுமன்றத்தின் பெயர் - டயட்
- நதிகள் இல்லாத நாடு - சவுதி அரேபியா
- ஓமன் நாட்டின் தலைநகரம் - மஸ்கட்
- உலகிலேயே புவியதிர்ச்சி அதிகம் உள்ள நாடு - ஜப்பான்
- விண்வெளியில் வைரம் தயாரித்த நாடு - ஜப்பான்
- உலகின் மிகப்பெரிய சூரிய அனல்மின் நிலையம் அமைந்துள்ள இடம் - கலிபோர்னியா
- அரபிக்கடலின் ராணி என புகழப்படுவது - கொச்சி
- இரும்பு மங்கை என்று அழைக்கப்பட்டவர் - மார்கரெட் தாட்சர்
- உலகின் முதல் செயற்கைத் துணைக்கோள் - ஸ்புட்னிக் (ரஷ்யா)
- செங்கற்கள் சிவப்பாக இருப்பதற்குக் காரணம் - இரும்பு ஆக்ஸைடு
- இந்தியக் காடுகளின் அரசன் என்று குறிப்பிடப்படும் மரம் - தேக்கு மரம்





# வர்ணம் தீட்டுவோம்



# பறவை

பறவை எல்லாம் பாடுச்சு
பக்கம் வந்து தேடுச்சு
கறவை மாடு சிரிச்சுச்சு
கறந்து பாலும் தந்துச்சு..!
குடிச்சு பறவை மகிழ்ந்துச்சு
கூட்டம் சேர கத்துச்சு
பசிக்கு இங்கே வந்திட
பாடிப் பாடி அழைச்சிச்சு..!

எங்கிருக்கும் பறவையும்
எகிறிப் பறந்து வந்துச்சு
இனத்தின் குரலைக் கேட்டுச்சு
இறங்கி வந்து பார்த்துச்சு..!
கோமாதா நமக்கு எல்லாம்
குடிக்க பாலும் தந்துச்சு
கூடி நாமும் கூட்டம் போட்டு
'அன்னை' யென்று
சொல்லுச்சு..!

பாதுகாக்கும் தாயாக
பட்டி தொட்டி சொல்லுது
சாதுவாக இருந்த அதுவும்
சினந்து காடு வெல்லுது..!
பறவைக் கூட்டம் நாமெல்லாம்
போற்றி அதை வணங்குவோம்
சிறகாய் நாமும் இருந்துமே
பறக்க வைத்து மகிழுவோம்..!

# பசித்தவன் விசுவாசத்தை நம்பலாமா?



கிணறு ஒன்றில் கங்காதத்தன் என்ற கிழத்தவளை ஒன்று வசித்து வந்தது. இந்தத் தவளையை அங்கிருந்த மற்ற தவளைகள் அடிக்கடி தொல்லைப் படுத்திக் கொண்டிருந்தது. மற்ற தவளைகள் கொடுத்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத கிழத்தவளை இராட்டினத் தோண்டி வழியே வெளியே வந்து மற்ற தவளைகளை என்ன செய்யலாம்? என்று யோசித்துக் கொண்டிருந்த போது அந்தக் கிணற்றுக்கு அருகிலிருந்த பாம்புப் புற்று அதன் கண்ணில் பட்டது. நம்மைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும் தவளைகளை இந்தப் புற்றிலிருக்கும் பாம்பின் உதவியோடு கொன்று விட்டால் என்ன? என்கிற எண்ணம் வந்தது. மெதுவாகப் பாம்புப் புற்றின் அருகில் சென்று பாம்பை நட்புக்கு அழைத்தது. உங்களுடைய பரம எதிரியான என்னுடன் நட்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புவது ஏன்? என்று கேட்டது அந்த பாம்பு. என்னுடன் இருக் கும் சில தவளைகள் என்னை தினந்தோறும் துன்புறுத்தி வருகின்றன. என்னால் பொறுக்க முடியவில்லை. அவற்றை அழிக்கத்தான் உன்னைத்தேடிவந்திருக்கிறேன். வேண்டாதவர்களை எதிரி யைக் கொண்டே அழிக் கலாம் என்று நீதி நூலில் கூட சொல்லி யிருக்கிறது என்றது அந்த கிழத்தவ்ளை. என்னால் எப்படி உன் இடத்துக்கு வரமுடியும்?

நான் வரும் இராட்டினத்தின் வழியாக உன்னை அங்கு அழைத்துச் செல்கிறேன் என்றது தவளை. பாம்பும் யோசித்தது. நாமோ தினமும் உணவுக்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது இப்படிவலியவந்துஉணவுக்குவழி செய்யும்தவளையின்கோரிக்கையைநாம்ஏன்மறுக்கவேண்டும்? என்று நினைத்தபடி தவளையுடன் அந்தக் கிணற்றுக்குள் சென்றது. அந்த பாம்பும் கிணற்றுக்குள் அந்த கிழத்தவளைக்குத் தொல்லை கொடுத்து வந்த தவளைகளை எல்லாம் தின்று அழித்தது. கிழத்தவளையும் மகிழ்ச்சியுற்றது. ஆனால் அந்த மகிழ்ச்சி நெடுநாள் நீடிக்கவில்லை. பாம்பு கிழத் தவளையைப் பார்த்து, உன்னுடைய எதிரிகள் எல்லாம் அழிந்து விட்டபடியால் என் பசிக்கு வேறு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்றது. கிழத்தவளையோ, நன்றியுரே நீங்கள்வந்த வேலை முடிந்து விட்டது. உங்கள் உதவிக்கு நன்றி. எனக்கு இனி உங்கள் உதவி தேவையில்லை என்றது.

ஆனால் பாம்போ கோபத்துடன், உன்னை நம்பித்தான் நான் இங்கு வந்தேன். இப்போது என்னுடைய இடத்தில் வேறு ஏதாவது வந்து குடியேறியிருக்கும். தினந்தோறும் எனக்கு நீயே ஒரு தவளையை உணவாகக் கொடுக்க வேண்டும். இல்லையேல் உன் கூட்டத்தில் இருப்பவர்களை நான் என் விருப்பப்படி பிடித்துத் தின்று என் பசியைப் போக்கிக் கொள்வேன். என்று அச்சுறுத்தியது. கிழத்தவளையும் பயந்து போய் தினந்தோறும் ஒரு தவளையை பாம்புக்குக் கொடுத்து வந்தது. கடைசியில் ஒருநாள் அது கிழத்தவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தது. இதைக்கண்டு அதிர்ச்சியுற்ற கிழத்தவளையின் மனைவி, நீங்கள் இந்தக் கொடியவனைக் கொண்டு வந்து நம் குழந்தையை மட்டுமில்லை, குலத்தையே அழித்து விட்டீர்கள். இனி நாமிருவர் மட்டும்தான் மிச்சம். நாமும் அழிந்து விடுவதற்கு முன்பு ஏதாவது சூழ்ச்சி செய்து அந்த பாம்பைக் கொன்று விடுங் கள் அல்லது நாமிருவரும் இங்கிருந்து தப்பித்துச் சென்று விடுவோம். என்று எச்சரித்தது.

அந்த சமயத்தில் அங்கு வந்த பாம்பு தனக்குப் பசியாக இருப்பதால் ஏதாவது கொடு என்று கேட்டது. உடனே கிழத்தவளையும், நண்பரே நாங்கள் இருக்கும் வரை நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் இப்போதே என் மனைவி யை அனுப்பி வேறு கிணற்றிலிருந்து தவளைகளை இங்கே அழைத்து வரச் சொல்கிறேன். என்று மனைவியை அங்கிருந்து போகச் செய்தது. சில நமிடங்கள் கழிந்த பின்பு, நீ எவ்வளவு நேரம் தான் பசியைப் பொறுத்துக் கொண்டிருப்பாய்? நானே வேகமாய்ப் போய்த் தவளைகளை அ வழியே அக்கிணற்றை விட்டு வெளியேறியது. தன் பசிக்கு உணவு கொண்டு வரச் சென்ற கிழட்டுத்தவளையும் அதனுடைய மனைவியும் ஒரு நாளாகியும் வராமலிருக் கவே பாம்பு ஏமாற்றமடைந்தது. கிணற்றுச் சுவற்றிலிருந்த ஒரு பல்லியைப் பார்த்த அந்த பாம்பு, பல்லியாரே, அந்தக் கிழட்டுத் தவளைக்கு நீயும் நண்பன்தானே, நீ அந்தத் தவளையிடம் சென்று, நான் அந்தத் தவளைக்குத் துரோகம் செய்யமாட்டேன் என்று நான் உறுதியளித்ததாகச் சொல்லி பயப்படாமல் வரச் சொல் என்று தகவல் சொல்லி அனுப்பியது. பல்லியும் அந்தக் கிழட்டுத்தவளையைத் தேடிச் சென்று பாம்பு சொன்ன செய்தியைச் சொல்லியது.

அதற்கு அந்தக் கிழட்டுத்தவளை பசித்தவன் விசுவாசம் நம்ப முடியாதது. அந்தக் கொடியவனிடம் நட்பு வைத்து என் குடும்பத்தினர் அனைவரையும் இழந்து விட்டேன். நான் இனி அங்கு வர மாட்டேன். இப்படித்தான் நாம் நம்முடைய சொல்லுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தீயவர்களோடு நட்பு கொண்டால் அந்தத் தீயவர்கள் நம்மையும் சேர்த்து அழித்து விடுவார்கள். நட்பு கூட நல்லவர்களோடுதான் வேண்டும். இல்லையேல் இழப்பு நமக்குத்தான்.


# மைத்திரி அரசில் மொழிக் கொள்கை?

**- லயனல் குருகே**
**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

மத நல்லிணக்கத்தையும், தேசிய ஐக்கியத்தையும் பிரதான மாகக் கொண்டு கடந்த ஜனாதிபதித் தேர்தல் நிறைவுபெற்றது. வரலாற்றில் என்றும் இல்லாதவாறு தமிழ், முஸ்லிம் வாக்காளர்கள் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராகத் தமது வாக்குகளைப் பயன்படுத்தினர். தமிழ், முஸ்லிம் மக்கள் தமது வாக்குகளை மைத்திரிபால சிறிசேனவுக்கே அள்ளிக் கொடுத்தனர்.

30 வருடகால யுத்தம் முடிவடைந்த பின்னர் வடபுலத்தில் குறிப்பிட்ட பௌதீக அபிவிருத்தி ஏற்பட்டிருந்தாலும் மக்களின் இதயங்கள் வெல்லப்படவில்லை என மைத்திரிபால சிறிசேன தேர்தல் மேடைகளில் முழங்கினார். தமிழ், முஸ்லிம் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதையிட்டு தனது அரசு கவனம் செலுத்தும் என்றும் அவர் பிரகடனப்படுத்தினார்.

அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆளுநர் பதவிகளை வகித்த இராணுவ



அதிகாரிகளுக்குப் பதிலாக சிவில் அதிகாரிகளை மைத்திரிபால சிறிசேன நியமித்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட அனைத்துத் தரப்பினரும் இதனை வரவேற்றனர்.

ஆனால், அரச தரப்பைச் சேர்ந்த ஒரு சிலர் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தடையாகச் செயற்படுவதாகத் தோன்றுகிறது. மஹிந்த ராஜபக்ஷ அரசின் கீழ் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு என ஒரு புதிய அமைச்சு நடைமுறையில் இருந்தது. மேற்படி அமைச்சுக்குப் பொறுப்பாக வாசுதேவ நாணயக்கார செயற்பட்டார். ஆனால், புதிய அரசு அமைச்சுக்களை உருவாக்கும்போது தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கடமைகள் பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி, பௌத்த சாசன அமைச்சில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. அமைச்சர் கருஜயசூரிய இந்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருக்கிறார்.

2010.11.25ஆம் திகதிய 1681/3 வர்த்தமானி அறிவித்தலின்கீழ் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு உருவாக்கப்பட்டது. அரச கரும மொழிகள் திணைக்களம், அரச கரும மொழிகள் ஆணைக்குழு, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் என்பன இந்த அமைச்சின் கீழ் செயற்பட்டன. இந்த அமைச்சின் விடயப் பரப்பை உள்ளடக்கக்கூடிய வகையில் போதிய நிதிவளங்கள் கிடைக்காத நிலையிலும்கூட அமைச்சர் வாசுதேவ குறிப்பிடத்தக்க வேலைத்திட்டங்களை அமுல்படுத்தினார் என ஏற்றுக்கொள்ளப்படுகிறது. குறிப்பாக அரச நிறுவனங்களில் இருமொழிக் கொள்கையை அமுல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், மும்மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியது. 30 ஆண்டுகளாக நீடித்த யுத்தத்துக்கு மொழிப் பிரச்சினை ஒரு பிரதான காரணியாக அமைந்தது. தமிழ்மொழி பேசுவோர் தமிழ் மொழியில் கருமமாற்றக்கூடிய பல ஏற்பாடுகள் தேசிய மொழிகள் அமைச்சின் ஊடாக அமுலாக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளை மிகப் பரந்துபட்ட முறையில் செயற்படுத்துவதற்கான வசதிகளைத் தொடர்வதே தற்போதைய அரசு மேற்கொள்ள வேண்டியிருந்தது.

பிரஜைகளின் மொழி உரிமை மீறப்படுவது தொடர்பான முறைப்பாடுகளைச் செய்வதற்கு அமைச்சு 1956 என்ற உடனடித் தொலைபேசி இலக்கத்தை அறிமுகம் செய்திருந்தது. செய்யப்படும் முறைப்பாடுகளையும், அதற்குரித்தான நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் சிற்சில குறைபாடுகள் காணப்பட்டாலும் இது காலத்துக்கு உசிதமான நடவடிக்கைகள் எனலாம்.

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் ஊடாக நீதியை நிலைநாட்டுவதற்கு முறைப்பாடுகள் செய்த பின்னர் விசாரணை நடவடிக்கைகளுக்கு கொழும்பை நோக்கி வரவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருந்தது. எனவே, கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்போது மாவட்ட மட்டத்தில் அரசகரும மொழி ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இன்றைய அரசு, ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக ஒரு பொறிமுறையை அமைத்திருக்க வேண்டும். ஆனால், அது இதுவரை உரிய முறையில் அமுல் படுத்தப்படவில்லை. அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிற்கான புதிய உறுப்பினர்களை புதிய அரசு இன்றுவரை நியமிக்கவில்லை.



அது இன்று செயலிழந்த நிலையில் உள்ளது. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் நடவடிக்கைகள் மத்திய அரசினால் அமுலாக்கப்பட்டாலும் அந்த விடயத்துக்கு உரித்தான நிறுவனக் கட்டமைப்புக்கள் மாகாண சபைகளினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனவே, தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு விடயம், மாகாண சபைகளின் விடயமாகவும் உள்வாங்க வேண்டியது இன்றைய கட்டத்தில் இன்றியமையாததாகும். இது விடயமாக ஒரு பரந்துபட்ட கலந்துரையாடல் இடம்பெற வேண்டும்.

முன்னைய தேசிய மொழிகள் அமைச்சின் கீழ் சுமார் 2000 மொழிச் சங்கங்கள் பதிவுசெய்யப் பட்டன. இந்தமொழிச் சங்கங்கள், குறித்த பிரதேசங்களில் சிவில் சமூகத்துடன் ஒருங்கிணைந்து, மொழி உரிமைகளை வென்றெடுப் பதற்கான பல பிரயோசனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டன. சிங்களம், தமிழ் ஆகிய அரசகரும மொழிகளை சாதாரண மக்களுக்கு அறிமுகம் செய்து கற்பித்தல், அரச நிறுவனங்களோடு மொழி உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்கள், பேரம்பேசல்கள், அறிவூட்டல் நிகழ்சிகள் என்பன மூலம் புரிந்துணர்வு கொண்ட ஒரு சூழமைவின் கீழ், இரு மொழிக் கொள்கை ஓரளவேனும் நடைமுறைப்படுத்தப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் இயங்கிய மொழிச் சங்கங்கள் சட்டரீதியான இடையீடுகளையும் மேற்கொண்டு, பிரஜைகளின் மொழி உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தன.

ஆனால், தற்போதைய அரசு இந்தமொழிச் சங்கங்கள் தொடர்பாக எதுவிதமான முன்னேற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அரசகரும மொழிகளை சாதாரண மக்களுக்குப் போதிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது செயலிழந்துள்ளன. தற்போதைய நல்லாட்சிக்கான அரசு மேற்படி மொழிச்சங்க பொறிமுறையை மேலும் வலுப்படுத்தி இயக்குவித்திருக்க வேண்டும். பொதுநிருவாக விடயத்துக்கு மேலதிகமாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் பௌத்த சாசன விடயம் ஒரே அமைச்சரின் கீழ் கொண்டுவருவதன் மூலம் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் நடவடிக்கைகள் செயலிழந்துள்ளன. நல்லாட்சியையும், ஜனநாயகத்தையும் நோக்கமாகக் கொண்டு செயற்படும் ஓர் அரசுக்கு இது பொருத்தமுடையதாகாது.

தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு அமைச்சரின் கீழ் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களதும், சுயாதீன அறிவு ஜீவிகளினதும் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் அரச கரும மொழிகளின் அமுலாக்கம் குறித்தும் அந்தக்கொள்கை பற்றியும் அடிக்கடி கலந்துரையாடப் பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசகரும மொழிக் கொள்கையின் அமுலாக்கத்தின் முன்னேற்றம், நடைமுறைப் பிரச்சினைகள் மற்றும் புதிய யோசனைகள் என்பன இந்த நிபுணர் குழுவின் கவனத்துக்கு

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயத் தோற்றம்

தாள்களுக்கிடையே வைத்து மூடிய
மைதோய்ந்த நூல்
விதம்விதமாக இழுபடும்போது
உருவாகின்றன எண்ணற்ற சித்திரங்கள்



ஒரு தாளில் தென்படுகிறது
ஊமத்தம்பூ
இன்னொன்றில் சுடர்விடுகிறது
குத்துவிளக்கு
அடுத்த பக்கத்தில் ஆர்ப்பரிக்கிறது
அலை உயர்த்திய கடல்
அதறகடுத்து படபடக்கிறது
முகமற்ற பெண்ணின் விரிகுழல்
பிறிதொரு பக்கத்தில்
உடலைத் தளர்த்தி
தலையை உயர்த்தி
செங்குத்தாக விரிந்த
பாம்பின் படம்

- பாவண்ணன்

# காதலாகி

கருவமரத்துப் பிசினில்
சிக்கியிருந்த
வண்ணத்துபபூச்சியை
எடுத்துப்
பறக்க விட்டபோது
ஓடிவந்து
ஒட்டிக்கொண்டது
காதல்

நான்
பணியில்
ஆழமூழ்கியிருந்தபோது
நண்பன்
கொண்டு வந்து கொடுத்தான்
உன்மடலை
பிரிக்காமலே படித்துக்கொண்டிருந்தது
மனசு

- இ.இசாக்

# எனக்கான முகமூடி



கனவு மூட்டைகளை சுமந்துகொண்டு
நீண்டதொரு பயணம், ஏதும் இலக்கின்றி.
சாலையெங்கும் சுற்றித்திரிந்தன மனிதஉடல்கள்
பல வண்ணங்களில் மனித முகங்கள் .
நாற்றமெடுத்து அழியபோகும் சதைப்பிண்டங்களை
தூக்கிச்செல்லும் பிணங்களோடு சந்திப்புகள்.
சந்திப்புகள் சிலதூரங்களில் பாதை மாறின.
ஏன்? என்ற கேள்வியோடு பயணத்தடை.
பதிலின்றி பயணம் தொடர அச்சம்.
தெரிந்துகொள்ள முயற்சித்து அதிர்ச்சி.
அனைத்தும் முகமூடி போர்த்தியவை.
புரிந்து கொண்டேன் முகமூடியின் அவசியத்தை.
பகட்டான முகமூடியின்றி பயணத்தை தொடரமுடியாது
எங்கே எனக்கான முகமூடி?

-ஹரன்

# மரநாய்

வேலிகளாக
நிமிர்ந்தெழுந்தது
ஆமணக்கு.
வெட்ட, பால் வடியும்
வெட்டிய அடிக்கட்டை

தரை முட்ட
ஆமணக்கங் குஞ்சுகள்
ஊருக்குத் தாய்த்திமிர்

எல்லாம் பொய்யாக்கி
புழுக்களை விதைத்தது.
இரவொன்றில் நுழைந்த
மரநாய்

ராட்சதக் கவலை
அரிப்பெடுத்த புழுக்கள்,
பிய்த்துக் கொடுத்த கம்புகளால்
எங்கள் தசைகளை சிதைத்தது
எச்சரித்தது மரநாய்

கற்சுவர் எழுப்பிய புழுக்கள்
ஆமணக்கு
அழிந்து கருகிய
இருப்பை மறைக்க,
மகிழ்ச்சி - மரநாய்க்கு


மரநாயின் ஆர்ப்பரிப்பில்
ஆமணக்கின் நினைவைக்கூட
வைத்திருக்க முடியவில்லை
எம்மால்

காய்ந்து
போன சாக்கில் அள்ளிக் கொட்டும்
மண் தூவிய காற்று
நாட்சரிவில் ஒருமுறை
வழி தவறியதாகத் திரும்பும் பஸ்

நாட்டிலா ? எங்கே ?
எனக்கேட்கும் பெயருடன்
இன்னும் என்
பன்னாடை ஊர். -கலைவாணி



# நொறுங்கிவிடத் தாமதமில்லை



கெஞ்சலான இரவு,
கிறக்கமான நட்சத்திரம்,
பருவமடைந்த நிலா,
வானத்திலோர் புரவி
செந்நிற புரவி
வெண்ணிறஆடை தேவதை
தென்றலாகத் தவழ்ந்தாள்
புரவி மேலிருந்து.
தலைகோதி அருகிலமர்ந்தாள்
மெல்லக் கரம்பிடித்தாள்.
எங்கோ பறந்தோம்
பிரபஞ்சத்தின் நடுவே
ஓர் மஞ்சம்
மஞ்சத்தில் தஞ்சம்.
காமம் கரைபுரளும்
கருவிழி கண்கள்
சில்லென்ற முத்தம்
உடல்முழுதும் தீமூட்டியது
தீயணைக்க அணைத்தாள்
பூச்சர கைகளில்
இரும்பொத்த வலிமை
அக்கணமே நொறுங்கிவிட
நொடியேதும் தாமதமில்லை

- மைதிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் இரத்த அழுத்தம் சில புதிய தகவல்கள்

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்



சொன்ன சொல் மாறிவிட்டீர்கள் என முகத்தில் அறையுமுறாப் போல அவர் குற்றம் சாட்டவில்லைத்தான். நீங்கள் முந்திச் சொன்னது ஒன்று. இன்று சொல்வது மற்றொன்று. படிச்ச நீங்களே இப்படி மாற்றிப் பேசலாமா என்றும் கேட்கவில்லைத்தான்.

ஆனால் இது நீதி அநீதி, சரி பிழை போன்றவை சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. அறிவியல். அதிலும் முக்கியமாக வளர்ந்து வரும் மருத்துவ அறிவியல், அது சார்ந்த பல்லாயிரக்கணக்கான ஆதாரங்களை அடிப்படையாக வைத்து, துறை சார்ந்த நிபுணர் குழுவினர் எட்டிய முடிவுகளை ஒட்டிய விடயம்.

வீட்டில் எலக்ரோனிக் கருவியில் பார்த்தபோது பிரஷர் சற்று அதிகம் இருந்ததால் பதற்றத்துடன் என்னிடம் வந்திருந்தார். நான் பார்த்தபோதும் கிட்டத்தட்ட அதே அளவுதான். 148/90 இருந்தது.

பரவாயில்லை உங்கடை வயதுக்கு அவ்வளவு இருக்கலாம் என்று சொன்னதின் பிரதிபலிப்பு இது. அவரது வயது 63 ஆகும்.

அவர் பயப்பட்டதிலும் நியாயம் இருக்கவே செய்கிறது. நாம் மருத்துவத் தொழில் ஆரம்பித்த காலங்களில் வயதுடன் 100 க் கூட்டினால் வரும் எண்ணிக்கையின் அளவுக்கு இரத்த அழுத்தம் இருக்கலாம் என்றோம். பின்னர் எந்த வயதானாலும் 130/90 ஐத் தாண்டக் கூடாது என்ற வரையறை வந்தது. இதையே அவர் ஞாபகத்தில் வைத்திருந்தார்.

இப்பொழுது புதிதான வழிகாட்டல் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 150/90 இருக்கலாம் என்கிறது.

உண்மைதான் மருத்துவ அறிவியல் கருத்துக்கள் கால ஓட்டத்தில் மாறுகின்றன. புதிய ஆய்வு முடிவுகளுக்கு ஏற்ப நோயாளிகளுக்கு அதிக நன்மை அளிக்குமாறு சிகிச்சை முறைகள் மாறவேண்டியது அவசியமாகிறது.

பிரஷர் பற்றிய Eighth Joint National Committee (JNC 8) யின் புதிய வழிகாட்டல்கள் என்ன கூறுகின்றன?

**அறுபது வயதுக்குமேற்பட்டவர்களில்**

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களது பிரஷர் ஆனது 150/90 மேல் இருந்தால் மட்டுமே சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும். அதாவது மேலே உள்ள சுருக்கழுத்தம் (Systolic blood pressure d SBP )150ற்கு மேல் இருந்தால் அல்லது கீழே உள்ள விரிவழுத்தம் (Diastolic blood pressure d DBP ) 90 ற்குக் மேல் இருந்தால் மட்டுமே சிகிச்சை அளிக்கபட வேண்டும்.

சரி புதிதாகச் சிகிச்சை அளிக்கும்போது பிரஷர் குறைந்தால் அல்லது ஏற்கனவே அவர்களது பிரஷரானது சிகிச்சை காரணமாக 140/90 ற்கு கீழ் குறைந்திருந்தால் மருந்தின் அளவைக் குறைக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.

இல்லை உட்கொள்ளும் மருந்தின் அளவானது அவர்களுக்கு எந்தவிதமான பாதகமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது. ஒத்துக்கொள்ளும் விதமாக இருந்தால் மருந்தின் அளவைக் குறைக்க வேண்டியதில்லை.

**அறுபது வயதுக்கு கீழ்ப்பட்டவர்களில்**

அதேநேரம் அறுபது வயதிற்கு கீழ்ப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது விரிவழுத்தம் ஆனது 90 ற்கு மேல் இருந்தால் சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும். சிகிச்சை மூலம் இதை 90 அல்லது 90ற்குக் கீழ் கொண்டு வருவது அவசியமாகும்.

அதே போல அறுபது வயதுக்கு கீழ்ப்பட்டவர்களின் சுருக்கமுத்தமானது 140 ற்கு மேல் இருந்தால் சிகிச்சையை ஆரம்பித்து அதனை 140 அல்லது அதற்குக் கீழ் குறைக்க வேண்டும்.


**நீரிழிவு மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களில்**

18 வயதுக்கு மேற்பட்ட நீரிழிவு நோயுள்ளவர்களுக்கும் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கும் இதே 140/ 90 ற்கு மேல் இருந்தால் பிரஷருக்கான சிகிச்சை அவசியமாகும்.

நீரிழிவு நோய் உள்ளவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் 18 வயதுக்கு மேல் எந்த வயதானவராக இருந்தாலும் அவர்களது இரத்த அழுத்தமானது 140/90 ற்கு மேல் இருந்தால் சிகிச்சை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

சுருக்கமுத்தமானது 140 அல்லது அதற்குக் கீழும் விரிவமுத்தமானது 90 அல்லது அதற்குக் கீழ் குறையுமாறு சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். நாட்பட்ட சிறுநீரக நோயுள்ளவர்களுக்கும் நீரிழிவு உள்ளவர்களது அளவுகளே பரிந்துரைக்கப்படுகிறது.

இது வரை காலமும் நீரிழிவு உள்ளவர்களது பிரஷரை 130/80 ற்கு குறைக்க வேண்டும் என்றே பெரும்பாலும் சிபார்சு செய்யப்பட்டது. ஆனால் அந்த அளவுக்கு குறைப்பதால், பக்கவாதம், இருதய நோய்கள், மாரடைப்பு, சிறுநீரக நோய்கள் போன்றவை ஏற்படாமல் தடுப்பதில் குறிப்பிடத்தக்க நன்மைகள் எதுவும் கிடைத்ததாக ஆய்வுகள்




உறுதிப்படுத்தாத காரணத்தால்தான் நீரிழிவு உள்ளவர்களுக்கும் அதே 140/90 ல் கட்டுப்படுத்துவது போதுமானது என்று சொல்கிறார்கள்.

**சிகிச்சை முறை**

நான்கு வகையான மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ((thiazidedtype diuretic, CCB, ACEI, or ARB) இவற்றில் கறுப்பு இன மக்களுக்கு முதல் இரண்டில் ஒன்றை ஆரம்ப நிலையில் உபயோகிக்கச் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

முதல் முதலாக ஒருவருக்கு பிரஷர் உள்ளது எனக் கண்டறியப்பட்டதும் மருத்துவர் மேற் கூறியவற்றில் ஏதாவது ஒரு பொருத்தமான மருந்தைத் சிபார்சு செய்வார். அதை உபயோகித்து வருகையில் ஒரு மாதத்தின் பின்னர் பிரஷரை மீண்டும் அளவிட்டு மருந்தின் அளவை மறு பரிசீலனை செய்வார்கள். பிரஷரானது சொல்லப்பட்ட அளவுக்கு அல்லது அதனிலும் சற்று அதிகமாகக் குறைந்திருந்தால் அதே அளவில் தொடர வேண்டும். மருந்தின் அளவைக் குறைக்கக் கூடாது.

ஆனால் பிரஷரின் அளவானது விரும்பப்பட்ட அளவுக்கு ஒரு மாதத்தில் குறைய வில்லை எனில் மருத்துவர் ஏற்கனவே கொடுத்த மருந்தின் அளவை அதிகரிப் பார் அல்லது இரண்டாவதாக மற்றொரு மருந்தைச் சேர்த்தும் தரக் கூடும்.

பிரஷரானது விரும்பிய அளவை எட்டும் வரை மருத்துவர் தொடர்ச்சியான கண்காணிப்பை வைத்திருப்பார். இரண்டு வகையான மருந்துகளைக் கொடுத்தும் பிரஷர் குறையவில்லை எனில் மூன்றாவது மருந்தையும் சேர்த்து உபயோகிக்கவும் நேரலாம்.

இவ்வளவையும் உங்கள் அருகில் உள்ள அரச மருத்துவர் அல்லது குடும்ப மருத்துவர் கண்காணித்து மருத்துவம் செய்வார். மூன்று மருந்துகளாலும் பிரஷரைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியாது போனால் மாத்திரம் ஒரு விசேட மருத்துவரை அணுகுவது உசிதமானது என சிபார்சு செய்கிறார்கள்.

சாதாரண இரத்த அழுத்தத்தை 120/ 80 என்பார்கள். இது 140/90 ற்கு மேலே

**(22 ஆம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார

# இராசி பலன்

01.04.2015 –07.04.2015

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

அறுசுவை உணவு, புத்தாடை நிம்மதியான நித்திரை நல்ல விதமாக கிடைக்கும். உடன்பிறந்தவர் எதிர்பார்ப்புடன் அணுகுவர். வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். புத்திரர் அதிக பணம் செலவு செய்ய விரும்புவார். . தொழிலில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும். பணியாளர், பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும். பெண்கள், உறவினர்களுக்கு உதவுவர். மாணவர்கள், எதிர்கால கடமை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

புத்திரரின் எண்ணங்களை ஒழுங்கு செய்து, அன்பை வளர்ப்பீர்கள். எதிர்மறையானவரும், உங்களின் செயல்திறன் பாராட்டுவர். இல்லறத் துணையின் உடல்நலத்திற்கு சிகிச்சை உதவும். தொழில், வியாபாரத்தில் நேரடி கவனம் பலவித நன்மையும் தரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், பிரார்த்தனை நிறைவேறி நன்றி சொல்ல வழிபாடு நடத்துவர்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

முயற்சி சிறந்து முழு அளவில் நன்மை தரும். உடன்பிறந்தவரின் மங்கல நிகழ்ச்சிக்கு உதவுவீர்கள். வாகனத்தில் பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். புத்திரர் ஆன்மிக கருத்து அறிவதில் ஆர்வம் கொள்வர். நிலுவைப் பணம் வசூலாகும். இல்லறத்துணை உங்களின் அந்தஸ்து பெருக வழி கூறுவார். தொழில், வியாபார அபிவிருத்தி பணி நிறைவேறும். பணியாளர், கூடுதல் வேலைவாய்ப்பு பெறுவர்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் செயல் குறையை கண்டிப்பதில் நிதானம் வேண்டும். இல்லறத்துணை உங்கள் மீது கொண்ட அன்பு, நம்பிக்கைக்கு குறை வராமல் நடந்து கொள்ளவும். பெணியாளர், பணம், கடன் பெறுவதில் நிதானம் வேண்டும். . மாணவர்கள் ஆடம்பர செலவினம் தவிர்க்கவும்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பம்**

புத்திரர் கூடுதல் அன்பு, பாசம் கொள்வர். உடல்நலம் பேணுவதில் கவனம் கூடும். இல்லறத்துணை இணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபார நிறுவன இடங்களை அழ்குபடுத்துவீர்கள். பெண்கள், பணம் சேமிப்பர். மாணவர்கள், நண்பரிடம் உருவான மனக்கிலேசம் சரி செய்வர்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

'சனி கொடுப்பதை எவர் தடுப்பர்' என்பது ஜோதிட மொழி. உள்ளன்புடன் பழகுகிற நண்பர் வியத்தகு அளவில் உதவுவார். இல்லறத்துணையின் மனதில் நம்பிக்கையை வளர்ப்பீர்கள். பணியாளர், கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். மாணவர்கள் சுய திறன் உணர்ந்து படிப்பில் முன்னேறுவர்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

செயல் அத்தனையும் குடும்ப நலன் சார்ந்து இருக்கும். பிணி தொந்தரவு குறையும். இல்லறத்துணையின் உடல்நலத்தில் கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்திற்கு நல்லோரின் ஆலோசனை உதவும். பணியாளர், நிர்வாகத்தின் சட்ட திட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள், பணச்செலவில் சிக்கனம் மேற்கொள்வர். மாணவர்கள், புதிய பயிற்சி முறை பின்பற்றுவர்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

சமூகப் பணியிலும் ஆர்வம் கொள்வீர்கள். புத்திரர், காலத்தை பொன்னாக மதித்து நடக்க இதமான அறிவுரை சொல்வீர்கள். இல்லறத்துணையின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பெண்கள், நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் சோம்பல் குணம் தவிர்த்து படிப்பில் கவனம் கொள்வர்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரரின் நற்செயலை பாராட்டுவதில் நண்பருக்கு இணையாக நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் புதியவர்களின் வருகையால் செழிக்கும். பணியாளர், கடமையை உணர்ந்து செயல்படுவர். பெண்கள், குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும்.

**மகரம்**

**திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

உடன்பிறந்தவருடன் வாகனத்தில் பயணிக்கும் போது மித வேகம் பின்பற்றவும். புத்திரர் உங்கள் சொல் கேட்டு நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற இல்லறத்துணையின் உதவி கண்காணிப்பு துணை நிற்கும். பணியாளர், பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

புத்திரர் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். சொத்து பராமரிப்பில் நம்பகமானவருக்கு இடம் தர வேண்டும். இல்லறத்துணை உங்களின் செயல் குறையை சரி செய்வார். தொழில், வியாபாரத்தில் சில மாற்றம் கொண்டு வருவீர்கள். பணியாளர்களுக்கு நிதியுதவி கிடைக்கும். பெண்கள், தெய்வ வழிபாட்டில் கலந்து கொள்வர். மாணவர்கள் தன் சிறப்பை உணர்ந்து நடப்பர்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

செயல் நிறைவேற அனுபவ அறிவு துணை நிற்கும். புத்திரர் பொது அறிவு வளர்த்துக் கொள்வார். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பணியாளர், சக பணியாளருடன் நட்பு பாராட்டுவர். பெண்கள், குடும்பத்தின் எதிர்கால நலனுக்கு உகந்த பணிபுரிவர். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபட வேண்டாம்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 80



தூசி கீழே படிந்து, புகையும் தெளிவடைந்த பின், ஏமது திடீர் அதிர்ச்சியில் இருந்து நாம் மீண்ட பின் எமது மாடிக்கு ஏற்பட்ட சேதத்தைப் பார்வையிட்டோம். யன்னல்கள் எல்லாமே உடைந்திருந்தன. கதவுகள் ஒன்றுமே இல்லை. சிறிதும் பெரிதுமாக எல்லாச் சுவரிலும் வெடிப்பு. ஆனால் வெடித்தகர்ப்பின் முழுத் தாக்கத்தையும் எமது மருமகனின் அறையிலேயே கண்டோம். வெடியின் பலம் , கம்பி வலையையும் இரும்புச் சலாகைச் சுவரையும் தகர்த்திருந்தது. மொட்டை மாடிக் கூரையில் ஓர் அடி ஆழமும் நான்கு அடி விட்டமுமான ஒரு பெரிய துவாரம். அதனூடாக வானம் தெரிந்தது. மாடிப் படிகளுக்கும் கடும் சேதம். சுவரில் ஓட்டை. எமது வாயில் கதவுக்கு முன்னே குண்டு வைக்க கொலைகாரனுக்கு வாய்ப்புக் கிடைத்தி ருந்தால் , கட்டடம் முற்றாகத் தகர்ந்திருக்கும். குண்டு எம்மை மட்டுமல்ல, கீழ் வீட்டில் வாழ்ந்த குடும்பத்தையே கொன்றிருக்கும்.

தமிழ் நாட்டின் பல்வேறு. பகுதிகளில் இருந்தெல்லாம் மக்கள் எம்மைப் பார்க்க வந்தார்கள். சம்பவம் நடந்த உடனடியாகவே நூற்றுக் கணக் கானோர் எமது வீட்டைத் தரிசித்துச் சென்றார்கள். அனைத்து இயக்க அமைப்புகளின் தலைவர்களும் வந்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப் இன் பத்மநாபா, ரெலோவின் சிறீசபாரத்தினம், ஈரோசின் பாலகுமார், புளெட்டின் சித்தார்த்தன், ரீயூ.எல்.எஃப் இன் சிவசிதம்பரம் ஆகிய எல்லோரும் தமிழ் மக்கள் ஒன்று பட்டு நிற்பதை உணர்த்தும் வகையில் வந்திருந்தார்கள். தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனும் எம்மைப் பார்க்க வரவிருந்தார். ஆனால் பாதுகாப் புக் காரணங்களுக்காக அவர் தமது வருகையை இரத்துச் செய்ய வேண்டியதாயிற்று. காவற்றுறையினர் தமது புலனாய்வைத் தொடக் கினர்.

எனது கதையைக் காவற்றுறையினர் செவி மடுத்தார்கள். நான் அடையாளம் காண்பதற்காக ஒரு வெளிறலான பெண்ணை அடையாளம் காட்டினார்கள். அவர்களுடைய புலனாய்வுத் திசை மாறத் தொடங்கியது. விடுதலைப்புலிகளின் உள்வீட்டு வேலையே இந்தக் குண்டுச் சம்பவம் என்று சந்தேகப்பட்டார்கள். இறுதியில் பாலா கூறியதை வைத்துக் கொண்டு உண்மைக் குற்றவாளியைக் காவற்று றையினர் கண்காணிக்கத் தொடங்கினர். கொலையாளி கொழும்பி லுள்ள தனது முதலாளி லலித் அத்துலக் முதலியோடு தொலைபேசி மூலம் உரையாடிக் கொண்டிருப்பது கண்டு பிடிக்கப் பட்டது. உத்தேச கொலையாளி விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே குற்ற உணர்வு மேலிட கண்ணீரும் கம்பலையுமாகச் சதித்திட்டத்தை ஒப்புக் கொண்டார். உடந்தையாக இருந்த பெண் அவருடைய மருமகள் என்பதும் தெரியவந்தது.

குற்றவாளி பல மாதங்களாகச் சென்னை மத்திய சிறையில் காவலில் இடப்பட்டார். கொலை முயற்சிக்காக வழக்குப் புதிய மாநில காவற் றுறை மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு அதிகாரிகள் முறியடித்தார்கள். ஜெயவர்த்தனாவின் அமைச் சரவையின் மூத்த அமைச்சர் ஒருவர் அதில் சம்பந்தப் பட்டிருந் ததால் , நாடுகளின் உறவில் அது பெருஞ்சேதம் விளை விக்கும் என்று அவர்கள் கருதினார்கள். சம்பவத்தை முழுமையாக மூடி மறைக்க இரண்டு அரசுகளும் கூடி முடிவெடுத்ததால் , இறுதியில் கந்தசாமி விடுவிக்கப்பட்டார். யாரும் அறியாமல் சிறீ லங்கா திரும்பி குற்றவியல் பதிவு எதுவும் இன்றி அமைதியான வழியில் ஈடுபட்டார். மாடி வீட்டைத் திருப்பிக் கட்டிக் கொடுக்க விடுதலைப்புலிகள் பெருமளவு நஷ்ட ஈடு செலுத்த நேர்ந்தது.

**(பதிவு தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலுக்கு இடையூறாக இருந்த தாதியை தீர்த்துக்கட்டிய கொடூரன்!

- வசந்தா அருள்ரட்ணம்

வர்க்கத்தின் மிகப் பெரிய சக்தியான பெண்ணியத்தின் பெருமையை எடுத்துக்கூறும் சர்வதேச பெண்கள் தினக் கொண்டாட்டங்கள் நிறைவடைந்த அடுத்த நாள். சரியாக மார்ச் 9ஆம் திகதி இரவு கலைந்து, புதியதொரு விடியல் பரவசமூட்டியது.

சூரியனின் வருகையினால் இலைகளிலும், புற்களிலும் படுத்துறங்கிய பனித்துளிகள் மெல்ல மெல்ல விலக ஆரம்பித்த நேரமது.

வதுபிடிய சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஞாயிறு விடுமுறை தினத்தை கழித்து அந்தப் புதிய வாரத்துக்கான எதிர்பார்ப்புக்களுடன் தமது வேலைத்தலத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

நேரம் காலை 7.15 மணியிருக்கும். வதுபிடிய சுதந்திர வர்த்தக வலயத்தின் பெண்கள் விடுதியிலிருந்து கேட்ட பெண்களின் அலறல் சத்தம் வதுபிட்டிய பிரதேச மக்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

1991.03.14 ஆம் திகதி பிறந்த நிரோஷினி ஜயசேன இயல்பாகவே இரக்க சுபாவத்தைக் கொண்டவள்.

சிறு வயது முதலே பிறருக்கு உதவி செய்து அதில் ஆனந்தம் கொள்வாள். எனவே எதிர்காலத்தில் தான் ஒரு சிறந்த தாதியாக வந்து எல்லோருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற இலட்சியத்தை மனதில் சுமந்தவாறு உயர்தரம் வரை கற்றாள்.

உயர்தரத்தின் பின் தனியார் நிறுவனமொன்றில் தாதியர்களுக்கான டிப்ளோமா பாடநெறியை நிறைவு செய்து சுமார் ஒரு வருட காலம் தனியார் வைத்தியசாலையொன்றில் தாதியாகவும் கடமையாற்றினாள்.

அதன்பின் அதே வைத்தியசாலையில் தனது திறமையின் காரணமாக தாதியர்களுக்கான ஆலோசகராகவும் கடமையாற்றினாள்.

அதுமட்டுமின்றி, சமய விடயங்களிலும்,சமூக சேவையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட நிரோஷினி பௌத்த ஞாயிறு பாடசாலையிலும் ஆசிரியராக கடமையாற்றினாள்.

இவ்வாறு அங்கு ஆசிரியராக கடமையாற்றும் காலப்பகுதியிலேயே கேகாலை, அம்பிட்டிய நாபெரியாவ கிராமத்தை வசிப்பிடமாக கொண்ட, இலங்கை இராணுவத்தில் மின்னியல் பொறியிலாளராக கடமையாற்றும் ஜெகத் ஸ்ரீ சமன் பண்டாரா என்ற இளைஞனின் அறிமுகம் நிரோஷினிக்கு கிடைத்தது.

எனவே இருவருக்கும் ஒருவரை ஒருவர் பிடித்து போக வெகு நாள்கள் செல்லும் முன்னரே கடந்த ஆண்டு ஜூன் 05 ஆம் திகதி பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் திருமண பந்தத்தில் இணைந்தாள்.

அதன் பின்னர் தனது குடும்பத்தின் பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்த வேண்டும் என்பதால் நிரோஷினி வதுபிட்டிய சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரியும் அதிகாரி ஒருவரின் உதவியுடன் வதுபிட்டிய சுதந்திர வர்த்தக வலயத்தில் தாதியாக வேலைக்கு சேர்ந்ததுடன், தனது தொழில் நிமித்தம் சுதந்திர வர்த்தக வலயத்தை அண்மித்துள்ள பெண்கள் விடுதியில் தங்கினாள்.

அதன்பின் அங்கு தொழில் புரியும் காலப்பகுதியிலேயே அவளுடைய நெருங்கிய தோழியான ஷசினியும் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலைக்கு சேர்ந்து நிரோஷினி தங்கியிருந்த அதே விடுதியில் தங்கினாள்.

எனினும் ஆரம்பத்தில் தனது தோழியின் வருகையை மகிழ்ச்சியுடன் ஏற்ற நிரோஷினிக்கு ஷசினி நொச்சியாகம பிரதேசத்தில் இராணுவத்தில் தொழில் புரியும் ஜிந்தகவை (பெயர் மாற்றப்பட்டுள்ளது) காதலிக்கின்றாள் என்று அறிந்தவுடன் அவள் காதலுக்கு எதிரியாக மாறினாள்.

பல நாள் ஜிந்தகவிடமிருந்து ஷசினிக்கு வரும் தொலைபேசி அழைப்புகளை ஷசினிக்கு தெரியாமலே துண்டித்து காதலர்களுக்கு இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தினாள்.

இது சிறிது நாள்களில் எப்படியோ ஷசினிக்கு தெரிய வந்து நிரோஷினியிடம் கேட்ட போது நீ இன்னும் சிறிய பிள்ளை ஜிந்தகவுடன் உள்ள காதல் தொடர்பை துண்டித்து விடு என்று அறிவுரை வழங்கினாள்.

அவளும் நண்பியின் நட்புக்கு மதிப்பளித்து தனது காதலை உள்ளுக்குள்ளே மறைத்து வைத்துக்கொண்டு நிரோஷினிக்கு பிடித்த விதத்தில் நடிக்க ஆரம்பித்தாள். எனினும் ஜிந்தகவுக்கு நிரோஷினியின் நடவடிக்கைகள் பிடிக்கவில்லை.

ஜிந்தக பல கிலோ மீற்றர் தொலைவிலிருப்பதால் தனது காதலியை சந்திக்க வாய்ப்புகள் கிடைக்கவில்லை. குறைந்தது தொலைபேசி உரையாடல்கள் மட்டுமே இருவருக்குமிடையிலான காதலை வளர்க்கும் ஊடகமாகவிருந்தது.

எனினும், நிரோஷினியின் நடத்தை காரணமாக தனது காதலியுடன் நிம்மதியாக உரையாட முடியவில்லையே என்ற ஆதங்கம் அவனுக்குள் உருவாகியது.

எனவே தனது காதலுக்கு நிரோஷினி தான் தடையாக இருக்கின்றாள். அவளை கொன்று விட்டால் தனக்கும் தனது காதலிக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை என்ற எண்ணத்துடன் அவளைக் கொலை செய்வதற்கான நாளையும்,முறையையும் திட்டமிட்டான்.

அதன்படி மார்ச் ஒன்பதாம் திகதி அதிகாலை நொச்சியாகம பிரதேசத்திலிருந்து முச்சக்கர வண்டியொன்றில் கையில் கத்தியுடன் சுதந்திர வர்த்தக வலயத்தை காலை 6.45 மணியளவில் வந்தடைந்தவன், தனது காதலியிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் சுதந்திர வர்த்தக வலயத்தின் பெண்கள் விடுதியின் பிரதான வாசலருகில் மறைந்து இருந்தான்.

அதன் பின்னர் காலை 7.00 மணியளவில் நிரோஷினி தனது விடுதி அறையிலிருந்து சுதந்திர வர்த்தக வலயத்துக்கு வேலைக்கு

( 21ஆம் பக்கம் பார்க்க)





அடுத்த கணமே மக்கள் கடல் அலை போல் குறித்த பெண்கள் விடுதியை நோக்கி படையெடுத்தார்கள். ஏன்? எதற்காக? இவர்கள் இவ்வாறு சத்தமிடுகின்றார்கள் என்ற அடுக்கடுக்கான கேள்விகள் பல அவர்களுக்குள் எழுந்த வண்ணமே இருந்தன.

எனவே சம்பவ இடத்துக்கு விரைவாக வந்தடைந்தவர்களுக்கு என்ன அநியாயம்? என்று வாயை மூடி அழும் அளவுக்கு அங்கு கண்ட காட்சியிருந்தது.

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரியும் அமைதியான சுபாவம் கொண்ட நிரோஷினி ஜயசேன என்ற 24 வயதான பெண் விடுதியில் வாசலருகில் குருதி வெள்ளத்தில் பலத்த கத்திக்குத்து காயங்களுடன் உயிருக்குப் போராடிய நிலையில் கிடந்தாள்.

ஒரு நிமிடம் அந்தக் காட்சி மனித நேயம் கொண்ட மனங்கள் அனைத்தையுமே ஸ்தம்பிக்க வைத்தது.

இந்த நிலையில் நிரோஷினியின் உயிரைக்காப்பாற்றும் முகமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயற்சித்த போதும் வழியிலேயே நிரோஷினியின் உயிர் அவள் உடலை விட்டுப்பிரிந்தது.

நிரோஷினி கொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், அநுராதபுரத்தில் ஸவஸ்திபுர சின்னிக்குளம் பிரதேசத்தை வதிவிடமாக கொண்ட டி.எம் ஜயசேன(59), வயலட் நோனா ஆகிய இருவரினதும் இளைய மகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண தண்டனைக் கைதி மயூரனின் மனநிலை என்ன?



சிறையில் வரைந்த ஓவியங்களுடன் மயூரன்

ஏப்ரல் 17ஆம் திகதி மயூரன் சுகுமாரனுக்கு 34ஆவது பிறந்த நாள். ஆனால் அந்த நாளைக் கொண்டாட, ஜாவா தீவில் இருக்கும் நுசகம்பன்கன் சிறையில் அவர் உயிரோடு இருப்பாரா அல்லது அதற்குள் அவரைச் சுட்டுக் கொன்றுவிடுவார்களா என்பது இந்த நிமிடம் வரை விடை தெரியாத கேள்வி!

ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் குழுவின் தலைவன் என்ற குற்றச்சாட்டில் மயூரன் சுகுமாரன் கைதுசெய்யப்பட்டதும், இதேபோல ஒரு பிறந்த நாளில்தான். 2005, ஏப்ரல் 17ஆம் திகதி பாலி தீவில் கைதானார் மயூரன்.

ஒன்பது பேரை போதைப்பொருள் களோடு இந்தோனேஷியா காவல்துறை அதிரடியாகக் கைதுசெய்து ஊடகங்கள் முன்பு நிறுத்திய போது, அன்று அதுதான் தலைப்புச் செய்தி.

கைதானது இந்தோனேஷியாவில் என்றாலும், கைதானவர்களில் அதிகமான வர்கள் அவுஸ்திரேலியா குடிமக்கள். அந்த அதிரடிக் கைது வழக்குக்கு இந்தோனே ஷியா அரசு வைத்த பெயர் 'பாலி-9'.

வழக்கு நடந்த அடுத்த ஆண்டே, அதில் முதன்மைக் குற்றவாளிகளாகக் கருதப்பட்ட மயூரன் சுகுமாரனுக்கும் ஆண்ட்ரூ சானுக் கும் சுட்டுக் கொல்லும் மரணதண்டனை வழங்கியது பாலி நீதிமன்றம்.

மேல்முறையீடுகள் தண்டனையை உறுதிசெய்ய, கடைசியாக எஞ்சியிருந்தது கருணை மனு மட்டுமே. இப்போது இந்தோ னேஷியா அதிபர், இந்த இருவரின் கருணை மனுக்களையும் நிராகரித்துவிட்டார்.

நுசகம்பன்கன் சிறைக்கு மாற்றப்பட்டு, மரணத்தின் நிழலில் நாள்களை எண்ணிக் கொண்டிருக்கும் தன் மகனை எப்படி மீட் பது எனத் தவிக்கிறார் மயூரன் சுகுமார னின் தாய் ராஜனி, அவுஸ்திரேலியாவில் ஒரு அற்புதம் அம்மாளைப் போல!

என் அம்மாவும் அப்பாவும் இலங்கை யில் இருந்தாலும், நானும் என் கணவர் சுகுமாரனும் லண்டனில் வேலை செய் தோம். அங்கேதான் மயூரன் பிறந்தான். இருவருமே வேலைக்குச் சென்று வந்ததால், அவனை இலங்கையில் இருந்த அவனது பாட்டியிடம் விட்டிருந்தோம். பிறகு, இலங்கைக்கு வந்து மயூரனை அழைத்துக்கொண்டு அவுஸ்திரேலியா சென்றோம்.

நான்கு வயதில் இருந்து அவன் அவுஸ்தி ரேலியாவில் படிக்கத் தொடங்கினான். ஒரு தாயாக அவனை வளர்த்த போதும் சரி, சக மனிதனாக அருகில் இருந்து பார்த்த போதும் சரி, அவன் அன்பானவனாகவே இருந்தான். பள்ளியில் கெட்டிக்காரன். தேவாலயத்தில் வாரம்தோறும் தன் க்டமைகளை உற்சாகமாக நிறைவேற்று கிறவன். அவனுக்கு ஒரு தம்பியும் ஒரு தங்கையும் உள்ளனர்.

'பாலி-9' வழக்கில் அவன் கைது செய்யப்பட்ட தினத்தில் இருந்து இன்று வரை எங்கள் குடும்பத்தில் யாராலும் அதை நம்ப முடியவில்லை. இப்போது அவனுக்கு இறுதித் தண்டனை வந்த பிறகு, அவனது வளர்ப்பில் ஏதேனும் குறைபாடுகள் இருந்ததா எனச் சிலர் கேட்கிறார்கள்.

ஒரு தாய் தன் மகனை எப்படியெல்லாம் அன்பாக வளர்ப்பாளோ, அப்படித்தான் நான் அவனை வளர்த்தேன். அவனை மட்டும் அல்ல மூன்று குழந்தைகளையுமே. இடை யில் அவன் திசைமாறிப் போயிருக்கலாம். நண்பர்கள் தவறாக வழிகாட்டியிருக் கலாம். ஆனால், இப்போது அது பற்றி பேசுவதோ, ஆராய்வதோ பலரையும் காயப்படுத்தும்.

**சிறை வாழ்க்கை, எனக்குப் பல விஷயங் களைக் கற்றுக் கொடுத்து விட்டது. இப்போது நான் மனிதர்களைப் பற்றி நிறையவே யோசிக்கிறேன். அவர்களுக்கு என்னால் என்ன உதவி செய்ய முடியுமோ, அதை மட்டும் செய்கிறேன்.**

நான் அவுஸ்திரேலிய மக்களிடமும் அரசிடமும் மன்னிப்புக் கேட்கிறேன். அவனை மன்னித்து, கருணை காட்டும்படி கேட்கிறேன். ஒரு தாயாக நான் இதை மட்டுமே செய்ய முடியும். எனக்கு என் மகன் வேண்டும்!

நாங்கள் அவனை விடுவிக்க இந்தோ னேஷியா நீதிமன்றத்தில் போராடினோம். அவுஸ்திரேலியா வழக்குரைஞர்களின் உதவியோடு இந்தோனேஷியா வழக்குரைஞர்கள் இயன்றவரை வாதாடிப் பார்த்தனர். எந்தப் பலனும் இல்லை

**ஒரு தாய் தன் மகனை எப்படியெல்லாம் அன்பாக வளர்ப்பாளோ, அப்படித்தான் நான் அவனை வளர்த்தேன். அவனை மட்டும் அல்ல மூன்று குழந்தைகளையுமே. இடையில் அவன் திசைமாறிப் போயிருக்கலாம். நண்பர்கள் தவறாக வழிகாட்டியிருக் கலாம். ஆனால், இப்போது அது பற்றி பேசுவதோ, ஆராய்வதோ பலரையும் காயப்படுத்தும்.**

நாங்கள் ஏன் அவனுக்காக இவ்வளவு போராடுகிறோம் என்றால், தன் வாழ்வில் இழைத்த ஒரு தவறுக்குப் பிராயச்சித்தமாக, சிறையில் மயூரன் சிறந்த மனிதனாக கடந்த 10 ஆண்டுகளாக வாழ்கிறான். தன்னால் முடிந்த உதவிகள் அனைத்தையும் பிறருக்குச் செய்கிறான்.

நான் தேவாலயம் போய் என் மகனுக் காகப் பிரார்த்திக்கிறேன். சிறைக்குப் போய் அவனைச் சந்திக்கிறேன். இதுதான் என் வாழ்க்கை என்றாகிவிட்டது. அவனை முதலில் வைத்திருந்த பாலி சிறை பற்றி வாசித்த போது, அது மிக மோசமான கெட்ட கனவாக இருந்தது. அவனை நேரில் பார்த்தபோது, என்னால் அவனைப் பார்க்க முடியவில்லை.

குமுறிக் குமுறி அழுதேன். அவன் என்னைத் தேற்றினான். அதன் பின்னரும் நான் சில முறை அவனைச் சந்தித்தேன். ஆனால் ஒருபோதும் அவனிடம், 'நீ இதைச் செய்தாயா? எனக் கேட்டது இல்லை, கேட்கவும் விரும்பவில்லை.

இந்த உலகம் அவனைக் குற்றவாளி என்கிறது. அவன் செய்தது பயங்கரமான குற்றம் என்கிறது. ஆனால், அவன் என் மகன்... அவ்வளவுதான். நான் போனால், என்னிடம் தன் அவுஸ்திரேலிய நண்பர்கள் பற்றி விசாரிக்கிறான்

தன்னைப் பற்றி பேசுவதை விட்டுவிட்டு வீடு பற்றி, தெரு பற்றி, தேவாலயம் பற்றி தகவல் கேட்கிறான். தங்கையிடமும் தம்பியிடமும் படிப்பு பற்றி பேசுகிறான். யோகா செய்யுமாறு சொல்கிறான்.

தான் சிறைக்குள் பைபிள் வாசிப்பதாக வும், தான் வரைந்த ஓவியங்கள், டி ஷர்ட் அச்சடிக்கும் தொழில் மூலம் அதிக வரு வாய் ஈட்டி, அதைப் போதைப் பழக்கத்தால் பாதிப்புக்கு உள்ளானவர்களின் மறுவாழ் வுக்குச் செலவழிப்பதாகவும் சொல்கிறான். இதனால்தான் இன்னொரு முறை அவனுக்கு வாழும் வாய்ப்பை வழங்கக் கேட்கிறேன்.

அமைதியாகச் சொல்லிவிட்டு, அழுத்த மான மௌனத்தில் ஆழ்கிறார் ராஜனி.

'பாலி-9' வழக்கில் மரணதண்ட னையை எதிர்நோக்கி இருக்கும் ஆண்ட்ரூ சானும் மயூரன் சுகுமாரனும் ஒரே பள்ளியில் வெவ்வேறு வகுப்புகளில் படித்தவர்கள். எனினும், நெருங்கிய நண்பர்கள் இல்லை. 2002ஆம் ஆண்டுவாக்கில் நெருக்கமாகிறார்கள்.

சீனா வம்சாவளியான ஆண்ட்ரூ சான் குடும்பமும், இடம்பெயர்ந்து அவுஸ்திரே லியா வந்த குடும்பம்தான். போதைப் பொருள் கடத்தலி ஈடுபடும் அவல வாழ்வுக்குப பலியாகும் பெரும்பான்மை யானவர்கள் தங்களின் பூர்வீகங்களைத் தொலைத்து அலையும் அகதிகளே. பாலியில் வைத்து இந்தோனேஷியா பொலிஸாரிடம் ஒன்பது பேரும் சிக்கியதே ஒரு பாசப் போராட்டத்தின் பக்கவிளைவு.

தன் மகன் தவறான பாதையில் செல் கிறான் என அவனைத் திருத்தும் வழி தெரியாத லீ ரஷ் என்கிற அவுஸ்திரேலியர், அவுஸ்திரேலியா பொலிஸாருக்கு தொலை பேசி மூலம் தகவல் தெரிவிக்கிறார்.

இந்தோனேஷியாவின் பாலி தீவில் த மகன் ஸ்காட் ரஷ் போதை மருந்து தொடர் பான நடவடிக்கையில் ஈடுபடவிருப்பதாகத் தனக்கு சந்தேகம் இருப்பதாகவும், அந்தக் கடத்தல் முயற்சியைத் தடுத்து நிறுத்தி, தன் மகனைத் தன்னிடம் ஒப்படைக்குமாறும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் கொடுக்கிறார்.

அவுஸ்திரேலியா பொலிஸ் இந்தத் தகவலை இந்தோனேஷியா பொலிஸுக்கு சொல்ல, ஹெராயினோடு அவுஸ்திரேலியா விமானத்தில் ஏற இருந்த சிலர் கைதுசெய்யப்படுகிறார்கள்.

மயூரனை ஹோட்டல் ஒன்றில் வைத்து பொலிஸ் கைது செய்த போது, அவரிடம் இருந்து போதைப்பொருள் எதுவும் மீட்கப்படவில்லை. அன்று மாலையே ஆண்ட்ரூ சானைப் போதைப்பொருளோடு பொலிஸ் கைதுசெய்ய, 'பாலி-9' வழக்கு இருவரையும் இறுகப் பற்றிக்கொள்கிறது.

அண்ணன் பற்றிய நினைவுகளைக் கம்மிய குரலில் பகிர்கிறார் மயூரனின் சகோதரி பிருந்தா...

"எனக்கு அவன் ஒரு நல்ல சகோதரனாக இருந்தான். அவனை நோக்கி வீசப்பட்ட ஒவ்வொரு கேள்வியும் என்னை நோக்கிக் கேட்கப்பட்ட கேள்வியாகவே இருந்தது. அவன் கைதுசெய்யப்பட்ட போது நாங்கள் நிலைகுலைந்து போனோம். அப்போது நான் ஒரு கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். படிப்பை

வழக்குக்காகச் செலவிட்ட மொத்த தொகையையும் வட்டியோடு திருப்பித் தருவதாகவும் கூறியது ஆஸ்திரேலியா.

ஐ.நா-வின் மனித உரிமைக் கண்காணிப்பகம் உள்பட பல நாட்டு மனித உரிமை அமைப்புகளும் தலைவர்களும், அவர்கள் இருவருக்கும் 'மரண தண்டனை விதிக்க வேண்டாம் என்ற கோரிக்கையை எழுப்பினார்கள்.

ஆனால், 'போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக எங்கள் அரசு வழங்கும் தண்டனையை ரத்துசெய்யக் கோரும் பேச்சுக்கு இடமே இல்லை. அது எங்களின் இறையாண்மையில் தலையிடும் செயல் எனக் கண்டிப்போடு சொல்லிவிட்டார் இந்தோனேஷியா அதிபர் ஜொகோ விடோடோ.

'பாலி-9' வழக்கில் கைதுசெய்யப்பட்டவர்கள் மிக மோசமான குற்றம் புரிந்தவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளும் அவுஸ்திரேலியா பிரதமர் டோனி அபாட், அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஏற்க மறுக்கிறார்.

மும் நான் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கிறேன் என்பதே மயூரன் கடைசியாக உலகத்துக்குச் சொன்ன செய்தி.

அவரால் இனி வெளியுலகைத் தொடர்பு கொள்ள இயலாது. ஏனென்றால், மரண தண்டனையை நிறைவேற்றும் ஜாவா தீவின் நுசகம்பன்கன் சிறை அத்தனை கொடியது.

நுசகம்பன்கன் சிறைக்கு மாற்றப்படும் எந்தக் குற்றவாளிக்கும் 72 மணி நேரத்தில் தண்டனையை நிறைவேற்றி விடுவதுதான் இந்தோனேஷியா மரபு. ஆனால், அந்தச் சிறைக்கு மாற்றப்பட்டு பல நாள்கள் ஆகியும் இன்னும் ஆண்ட்ரூ சானுக்கும் மயூரன் சுகுமாரனுக்கும் தண்டனை நிறைவேற்றப்படாமல் இருப்பதை ஒரு நல்லெண்ண சமிக்ஞையாகப் பார்க்கிறார்கள் சிலர்.

அதே சமயம், 'இந்தத் தாமதம் மயூரனின் பிறந்த நாளை எதிர்நோக்கியா? என்பதும் விடை தெரியாத கேள்வி!

காலம், பல தவறுகளைச் சரிசெய்யலாம். ஆனால், கருணை என்பது



கைதான பின்பு...

அப்படியே கைவிட நேர்ந்தது.

இன்று அவுஸ்திரேலியா அரசு எவ்வளவோ முயன்றும், என் அண்ணன் இன்னும் மரணத்தின் பிடியில் இருந்து விலகவில்லை. அவன் எங்கேயாவது ஓர் இடத்தில் உயிரோடு இருந்தால் கூடப் போதும். ஆனால், அது நிச்சயம் இல்லாமல் இருக்கிறது.

மரண தண்டனை ஒழிக்கப்பட்ட நாட்டில் இருந்து மரண தண்டனை விதிக்கப்படும் அந்நிய நாட்டின் சட்டப் பிடியில் இருந்து என் சகோதரனை மீட்கும் வழி தெரியாமல் தவிக்கிறோம். அவனைச் சுட்டுக் கொல்லும் நாளில் மரணிக்கப் போவது மயூரன் மட்டும் அல்ல... நான், அப்பா சுகுமாரன், அம்மா ராஜனி, தம்பி மைக்கேல்... என எங்கள் அனைவரின் மனசாட்சியும்தான்.

**நுசகம்பன்கன் சிறைக்கு மாற்றப்படும் எந்தக் குற்றவாளிக்கும் 72 மணி நேரத்தில் தண்டனையை நிறைவேற்றி விடுவதுதான் இந்தோனேஷியா மரபு. ஆனால், அந்தச் சிறைக்கு மாற்றப்பட்டு பல நாள்கள் ஆகியும் இன்னும் ஆண்ட்ரூ சானுக்கும் மயூரன் சுகுமாரனுக்கும் தண்டனை நிறைவேற்றப் படாமல் இருப்பதை ஒரு நல்லெண்ண சமிக்ஞையாகப் பார்க்கிறார்கள் சிலர்.**

அன்று நாங்கள் அனைவருமே துயரமான ஒரு வாழ்க்கையினுள் விழப் போகிறோம். இப்போதே நாங்கள் தனித்து வாழ்கிறோம். எங்கள் வீட்டில் நல்ல சாப்பாடு சாப்பிட்டே பல நாள்கள் ஆகின்றன.

அந்தக் கறுப்பு நாளுக்குப் பிறகு எங்கள் நிலை என்னவாக இருக்கும் எனக் கற்பனைகூட செய்ய முடியவில்லை.

அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர்கள் ஆறு பேர் கையெழுத்திட்டு, மயூரனையும் ஆண்ட்ரூ சானையும் விடுவிக்குமாறு இந்தோனேஷியா அரசாங்கத்துக்கு வைத்த கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

அவுஸ்திரேலியா கைதிகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருவரையும் மட்டும் ஒப்படைக்குமாறு கேட்டுப் பார்த்தது. அதற்கும் வளைந்து கொடுக்கவில்லை இந்தோனேஷியா.

அடுத்த யோசனையாக, இவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கினால் 'பாலி-9'

ஏற்கெனவே சில பிரச்சினைகளில் இருநாட்டு உறவுகளும் பாதிக்கப்பட்டிருக்க, இருவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் அந்த நாடுகளின் உறவில் மேலும் விரிசல் விழலாம்.

10 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் மயூரன் சுகுமாரனின் மனநிலை என்ன?

'நான் கைதுசெய்யப்படும் வரை, யாருக்கும் நான் எந்த ஒரு சிறு உதவியும் செய்தது இல்லை. மிக மிக சுயநலமாக என்னைப் பற்றி மட்டுமே யோசிக்கக்கூடிய ஒரு மனிதனாக இருந்தேன். வாழ்க்கையின் தேவைகள் என்ன, நோக்கங்கள் என்ன என்பது பற்றி தெரிந்து கொள்ளாமல் ஒரு வாழ்வை வாழ்ந்துவிட்டேன்.

ஆனால், இந்தச் சிறை வாழ்க்கை, எனக்குப் பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்து விட்டது. இப்போது நான் மனிதர்களைப் பற்றி நிறையவே யோசிக்கிறேன். அவர்களுக்கு என்னால் என்ன உதவி செய்ய முடியுமோ, அதை மட்டும் செய்கிறேன்.

இப்போது நான் வாழ ஆசைப்படுகிறேன். ஏனென்றால், நான் கைதுசெய்யப்பட்டதில் இருந்து இந்த நிமிடம் வரையிலான என் வாழ்வை நான் அர்த்தம் உள்ளதாக மாற்றியிருக்கிறேன்.

எனக்குத் தெரியாத பல விஷயங்களை வாழ்க்கை இப்போது கற்றுக் கொடுத்திருக்கிறது. அவுஸ்திரேலியா மக்களிடமும் இந்தோனேஷியா மக்களிடமும் போதைப் பொருள்களைப் பயன்படுத்தும் அனைவரிட

காலம் கருதி வருவதல்ல. மயூரன், ஆண்ட்ருவின் முடிவு கருணையின் கையிலா... சட்டத்தின் கையிலா என்பதை காலம்தான் முடிவுசெய்யும்!

சிறையில் என்ன செய்கிறார்கள்?

'பாலி-9' வழக்கில் கைதுசெய்யப்பட்ட மயூரன் சுகுமாரனும் ஆண்ட்ரூ சானும் எப்படி இருக்கிறார்கள்?

கைதுசெய்யப்பட்ட சில நாள்களிலேயே புதிய வாழ்வுக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்ட மயூரன், தனக்குள் இருந்த ஓவியத் திறமையை முழுமையாக வெளிப்படுத்தியிருக்கிறார். சிறையில் தான் வரைந்த ஓவியங்களை ஏலம்விட்டு, அதில் வந்த தொகையை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்துக்குக் கொடுத்தார்.

தனது கடந்தகாலத்தை மறக்கவும், மன அமைதிக்காகவும் மயூரன் நூற்றுக்கணக்கான ஓவியங்களை வரைந்தார். அவற்றில் பல ஓவியங்களில் தன் அம்மா, தங்கை, தம்பி, நண்பன் ஆண்ட்ரூ சான் ஆகியோரோடு தன்னையும் வரைந்திருக்கிறார் மயூரன்.

ஆண்ட்ரூ சான், போதைப் பழக்கத்தில் இருந்து தன்னை மீட்டுக்கொண்டு, சிறையில் கிறிஸ்தவ போதகர் ஆகிவிட்டார். தன் காதலியை மணம் முடித்திருக்கும் ஆண்ட்ரூ சான், தன் சுயசரிதையை எழுதியிருக்கிறார்.

அதில், 'என் குடும்பத்தில் நடந்த திருமணங்களுக்கு நான் சென்றது இல்லை. யாராவது இறந்தால், அந்த இறுதிச் சடங்குகளுக்குக்கூட நான் சென்றது இல்லை. என் குடும்பத்தினருடன் நான் ஒருபோதும் நேரம் செலவிட்டது இல்லை. ஆனால், இப்போது இந்த வலிகளையும் வேதனைகளையும் நான் மட்டும் அனுபவிக்கவில்லை, என் குடும்பமும் சேர்ந்து அனுபவிக்கிறது' - என எழுதியிருக்கிறார்!

# காதலுக்கு...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதற்காக பிரதான வாசலுக்கு வரும் வேளையிலேயே மறைந்திருந்தவன் நிரோஷினியை கத்தியால் குத்த ஆரம்பித்தான்.

எனினும் அந்த நேரம் அங்கு யாரும் இருக்கவில்லை. எனவே நிரோஷினி அவனிடம் இருந்து தப்பித்துச் செல்ல பலவாறு முயற்சித்த போதும் அவள் முயற்சியில் தோற்றாள்.

அவனின் கையிலிருந்த கத்தி பத்து தடவைகளுக்கு மேல் அவள் உடலைப் பதம் பார்த்தது. ஜிந்தகவின் கத்திக் குத்துக்கு நிரோஷினி இலக்காகி சில மணி நேரங்களுக்கு பின்னரே விடுதியில் தங்கியிருந்த பெண்கள் பிரதான வாசலருகில் உயிருக்கு போராடிய நிலையில் அவள் துடிதுடிப்பதைக் கண்டு பலத்த சத்தத்துடன் கத்தியுள்ளார்கள்.

எனினும் அந்த நேரம் கொலையாளியான ஜிந்தக சம்பவ இடத்திலிருந்து தப்பியோடி இருந்தான். அதன்பின் நிரோஷினியை அனைவரும் சேர்ந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயற்சித்த போதும் அவள் உயிரை காப்பாற்ற முடியவில்லை. நிரோஷினியின் உயிர் பாதி வழியிலேயே அவள் உடலை விட்டுப் பிரிந்தது.

இதேவேளை நிரோஷினி ஏன் கொலை செய்யப்பட்டாள்? அவளுடைய கொலையுடன் யாருக்குத் தொடர்பிருக்கின்றது? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது பொலிஸாரின் கவனம் நிரோஷினியின் தோழியான ஷசினியின் மீது திரும்பியது.

எனவே ஷசினியிடம் பொலிஸார் கடுமையான விசாரணைகளை முன்னெடுத்ததன் மூலம் தான் இந்தக்கொலையுடன் ஜிந்தக்கவுக்கு தொடர்பு இருக்கின்றது என்ற உண்மை தெரியவந்ததுடன் ஜிந்தகவை கைது செய்து மேலதிக விசாரணைகளையும் முன்னெடுக்க முடிந்தது.


அந்த விசாரணைகளின்படி காதல் தொடர்பு ஒன்றில் ஏற்பட்ட பிரச்சினைகளின் காரணமாகவே மேற்படி கொலை இடம்பெற்றிருப்பதாகவும், கத்திக்குத்துக்கு இலக்கான நிலையிலேயே குறித்த பெண் உயிரிழந்திருப்பதாகவும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது

எனவே மேற்படி சம்பவத்தில் தேவையற்ற ஒரு விடயத்தில் தலையிட்ட காரணத்தினால் பரிதாபகரமாக தனது உயிரை இழக்கும் துர்ப்பாக்கிய நிலை நிரோஷினிக்கு ஏற்பட்டது.

158ஆவது சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்கள் நிறைவு செய்யப்பட்டு 7 மணித்தியாலங்கள் மட்டுமே கடந்த நிலையில் அன்பின் உருவமாக இருந்த ஒரு பெண் இவ்வுலக வாழ்விலிருந்தே விடைபெற்றுச் சென்று விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாஸ்துபடி தியானம் செய்ய சிறந்த இடம் எது?

உளவி தியானம் என்பது அலைபாயும் நம் மனதை ஒருநிலை படுத்தும் நிலையே தியானமாகும்.

அமைதி, அன்பு, மகிழ்ச்சி ஆகிய இயற்கை வளத்தை மேம்படுத்தி உள் மன உணர்வை வலுப்படுத்துவதே தியானம்.

மேலும், தெளிவான சிந்தனையுடன் சரியான முடிவை எடுக்கத் தேவை மனோதிடம்.

இந்த மனோதிடத்தைப் பெறுவதற்கு மிகச்சிறந்த வழிகளில் முக்கியமானது தியானம் என்றால் மிகையில்லை. இவ்வாறு தியானம் செய்வதற்கு அமைதியான சூழல், சுத்தமான காற்று என்பன முக்கியம்.

அதேபோல் தியானம் செய்ய வாஸ்து படி சிறந்த இடம் ஒரு இடத்தின் வடகிழக்கு மூலை ஆகும். அந்த வடகிழக்கு அறையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் ஜன்னல் இருப்பது மிகவும் நல்லது.

# உயர் இரத்த...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றால்தான் அதை உயர் இரத்த அழுத்தம் என்கிறோம். இதில் எந்த மாற்றத்தையும் புதிய வழிகாட்டல் செய்யவில்லை. வயதானவர்கள் மற்றும் நீரிழிவு உள்ளவர்களில் இதை எந்த அளவுக்குக் குறைக்க வேண்டும் என்பதையே புதிய வழிகாட்டல் சொல்கிறது.

மருந்துகளைப் பற்றிச் சொன்னபோதும் பிரஷரைக் குறைப்பதில் வாழ்க்கை முறை மாற்றங்கள் உதவும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆரோக்கியமான உணவு முறை, தினசரி உடற் பயிற்சி, எடையைச் சரியான அளவில் பேணுதல் போன்றவற்றை கடைப்பிடிப்பது அவசியம் என்பதை புதிய வழிகாட்டல்கள் உறுதிப்படுத்தவே செய்கிறது.

எனவே மருந்தைப் போட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற மனநிலையை மாற்ற வேண்டும். ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பது எப்போதும் அவசியமானதே.

இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் பொதுவான உடல்நலம் மேம்படுவது மாத்திரமின்றி மருந்துகளின் அளவுகளையும் குறைக்க முடியும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

# சிங்கப்பூரை...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று அழைக்கப்படும் சீனப் பாரம்பரியம் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். வாழ்ந்து கெட்ட குடும்பத்தை லீயின் அம்மாதான் தூக்கி நிறுத்தினார்.

சிறு வயதில் லீ குவான் யூவுக்கு இங்கிலாந்து மீது ஈர்ப்பு அதிகம். முதல் உலகப் போரில் ஜப்பான், இங்கிலாந்தை பந்தாடியபோது அந்த ஈர்ப்பு அவருக்குப் போய்விட்டது. அதுவே பின்னாளில் அவரது இங்கிலாந்து எதிர்ப்புக் கொள்கையாக மாறியது.

உலகில் அதிக ஆண்டு காலம் ஜனநாயக அரசு ஒன்றின் பிரதமராக இருந்தவர். லீ டொயின் பீயின் சிந்தனைகளால் கவரப்பட்டவர். கற்பனைத் திறன் கொண்ட சிறுபான்மையினரே நாட்டைச் செதுக்குவார்கள் என்ற அவரது கருத்தில் நம்பிக்கை கொண்ட வர்.

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை காந்திக்கு எவ்வளவு வருத்தத்தைக் கொடுத்ததோ லீக்கு அந்த அளவு வருத்தம் கொடுத்தது மலேசியா, சிங்கப்பூர் பிரிவினை. இயற்கை வளங்கள் இல்லாத சிங்கப்பூரை மலேசியர்கள் சிலர் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அந்த கோபமே லீயின் வைராக்கியமாக மாறி சிங்கப்பூரை வளர்ச்சி பெறச் செய்தது.

அடியாத மாடு படியாது என்பதில் நம்பிக்கை கொண்டவர் லீ. பாடசாலையில் படிக்கும் போது நான் தவறு செய்தால் ஆசிரியர்கள் பிரம்பால் விளாசுவார்கள். அதுவே என்னை ஒழுக்கமாக மாற்றியது. அதனால்தான் தவறு செய்வோருக்கு பிரம்படி கொடுக்கும் தண்டனை அமுல்படுத்தினேன் என்றார்.

விளையாட்டு, பொழுது போக்கு பிரியர் லீ. கோல்ப், நடனம், நீச்சல் அவருக்கு பிடித்தமானவை.

லீயை பொறுத்தவரை புனைவு நூல்கள் குப்பை. அவரே பல நூல்கள் எழுதியிருக்கிறார். அவருக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர் டாம் கிளான்சி.

இன்றைய அரசியல்வாதிகள் லீயிடம் கற்க வேண்டியதில் முக்கியமானது மதச்சார்பின்மை. அரசியல், பொருளாதாரம் பற்றி ஏதேனும் சொல்ல வேண்டுமானால் உங்கள் மத அங்கிகளை கழற்றிவிட்டு வாருங்கள் என்பார் லீ.

அவரது ஆட்சியில் கேள்விகள் கேட்ட எதிர்க்கட்சியினர், பத்திரிகையாளர்கள், மனித உரிமையாளர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். ஊழல், வறுமை, உள்நாட்டு குழப்பம் என்று சிக்கலாக இருந்த சூழலில் நாட்டை முன்னேற்ற தனக்கு வேறு வழி இல்லை என்றார் லீ.

தன்னைப் பற்றிய சர்ச்சைகளை பொருட்டாக எடுத்துக்கொள்ளமாட்டார். படித்தவர்கள், படித்தவர்களையே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்கிற அவரது கொள்கை மிகுந்த சர்ச்சையைக் கிளப்பியது.

மனித அறிவு வளர்ச்சிக்கும் மரபணுக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக கருதிய லீ அவ்வாறு அறி வித்தார்.

# மைத்திரி அரசில்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரப்பட்டன. இந்த மீளாய்வு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நடவடிக்கையாகும். அமைச்சர் நேரடியாகவே இந்தக் கலந்துரையாடலில் தனது சக அதிகாரிகளுடன் கலந்துகொண்டு மொழிக் கொள்கையை அமுலாக்குவதில் அடிக்கடி இடையீடு செய்தார். ஆனால், அவை அனைத்தும் தற்போது செயலிழந்த நிலையிலேயே உள்ளன.

சமூக ஒருங்கிணைப்பு ஏற்பட வேண்டுமாயின் அதற்கென அர்ப்பணித்த நிகழ்ச்சித்திட்டம் ஊடாக மாத்திரமே அது சாத்தியமாகும். வெறுமனே சமாதானத்தையும், சகவாழ்வையும் ஜெபிப்பதன் மூலம் மாத்திரம் இந்த நோக்கத்தை அடைய முடியாது. இதற்கு நடைமுறை வேலைத்திட்டம் ஒன்று இருக்க வேண்டும்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, மொழிகள் தொடர்பான ஏற்பாடுகள், அறிவித்தல்கள், LLRC பரிந்துரைகள், மொழி உரிமைகள் தொடர்பான வழக்குத் தீர்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, அவற்றை நடைமுறைப்படுத்தல், இவை ஒவ்வொன்றுடன் தொடர்பான வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உசிதமான சூழமைவை உருவாக்குதல் மிக முக்கியமானது. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இது மிகவும் சிறந்த மார்க்கமாகும்.

எனவே, பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு மேலதிகமாக இந்த நாட்டின் தமிழ், முஸ்லிம் மக்களின் பெரு விருப்பையும், எதிர்பார்ப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு புதிய ஜனாதிபதியும், புதிய அரசும் தேசிய ஐக்கியத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, மொழிக்கொள்கையை அமுல்படுத்துவதற்குக் கூருணர்வுடன் செயற்படுவதும் இன்றியமையாதது. யுத்தம் ஓய்ந்தாலும் அதன் கசப்பான அனுபவங்களால் விரிசலடைந்துள்ள வடக்குத் தெற்கு மக்களின் இதயங்களை ஒருங்கிணைத்தல் இன்றியமையாதது. அதனை அமுலாக்குவதாயின், முதலில் அது குறித்து முன்னோடியான சிந்தனையுடன் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். போரினால் மனிதத் தன்மையே தோல்வி காண்கிறது. யுத்தத்தினால் வெற்றி கண்டவர் எவரும் இல்லை. அநாவசியமான வெற்றி மனப்பான்மை செயற்கையாக உருவாக்கப்பட்டமையால் அது நல்லிணக்கத்துக்கு பாரிய தடையாகவே அமைகிறது. இதன் பெறுபேறாகவே தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தென்னிலங்கையின் சிங்கள சமூகம் மீதும், தென்னிலங்கையின் சிங்கள சமூகம் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் சமூகங்கள் மீதும் சந்தேகத்தோடு நோக்குகின்றன.

எனவே, அர்ப்பணிப்புடனான மொழிப் பிரச்சினை பற்றிய சரியான புரிந்துணர்வையும், தேசிய நல்லிணக்கத்துக்கு அவசியமான பொறிமுறையை இயங்க வைப்பதும், தற்போதைய அரசின் முக்கிய கடமையாகும். சிங்களம் பேசும், தமிழ் பேசும் மக்களின் கலாசார வாழ்வில் ஒரு எழுச்சியை ஏற்படுத்துவதற்கு கலை, இலக்கியம் ஆகிய ஊடகங்களை சிறந்த முறையில் பயன்படுத்த முடியும்.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்கள் தமக்கே உரித்தான கலையையும் கலாசாரத்தையும் மேம்படுத்துவதற்கு கூத்து போன்ற அருகிவரும் நாடக மரபுகளுக்கு உயிரூட்ட வேண்டும். இன்று தமிழ் நாட்டின் வாணிபக் கலை வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பொழுதுபோக்காகவும், இரசனையாகவும் மாறியுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்களின் கலாசார மரபுரிமைகளை அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்துவதற்கு மத்திய அரசின் கலாசார அமைச்சு செயற்பட வேண்டும். தேசிய ஐக்கியத்தை உருவாக்கும்போது கலை, இலக்கியம் மற்றும் நாட்டார் கலைகள் போன்ற கலாசார அங்கங்கள் மூலமும் பாரிய நற்பணியை மேற்கொள்ள முடியும். இத்தகைய சகல வகைப்பொறுப்புக்களையும் ஏற்கக் கூடிய தேசிய மொழி சமூக ஒருங்கிணைப்பு கலாசார நிகழ்ச்சித்திட்டங்களுடனான சுயாதீன அமைச்சொன்றை உருவாக்குவதற்கு அரசு தனது கவனத்தைச் செலுத்த வேண்டும். மாகாண சபைகள் என்ற விடயப் பரப்பின் நிகழ்ச்சித்திட்டங்களையும் இந்த அமைச்சு உள்வாங்கி உறுதுணை புரியவேண்டும். வடக்கையும், கிழக்கையும், தெற்கையும் இணைக்கும் முதல் நடவடிக்கையாக இதனை அமைத்துக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRITISH COUNCIL



# பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணக் கிளையில்

ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டு
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 1000

70 ரக்கா வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை: 0830-18

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை: 0830-1800

88/3 கொட்டுகொடெல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை: 0900-1730
ஞாயிறு 0900-1600

நாங்கள் Apex Business Academ... இணைந்து எங்கள் பாடநெறிகளை நடாத்துகின்றோம். மாத்தறை (041)2229555 காலி (091)2232755

www.britishcouncil.lk



Australian Government

# ஒரு வழியும் இல்லை!

உங்களால் அவுஸ்திரேலியாவில் காலடி எடுத்து வைக்க முடியாது

2013 ஆம் ஆண்டு முதல் அமுலிலுள்ள, எல்லைப் பாதுகாப்புச் செயற்பாடுகளின் பின்னர், அவுஸ்திரேலியாவுக்குள் உட்பிரவேசிக்க முயற்சித்த ஆட்கடத்தல்களில் ஈடுபட்டுள்ள அனைத்து இலங்கை படகுகளின் செயற்பாடுகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன.



உங்களது பணத்தை வீண் விரையம் செய்ய முன்னர் மீண்டும் சிந்தியுங்கள், ஆட்கடத்தல்காரர்களின் பொய் வாக்குறுதிகளை நம்பி ஏமார்ந்து விடாதீர்கள்.

கடல் மார்க்கமாக மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல்களுக்கு எதிரான, அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முடியாது.

www.australia.gov.au/novisa



அபான்ஸின்

# புத்தாண்டு அதிஷ்டம்

- 50% வரை தள்ளுபடி
- 50 மாதம் வரை வட்டியின்றிய கொடுப்பனவு
- மாற்றீட்டுச் சலுகை
- பெறுமதியான இலவச பரிசில்கள்
- கூட்டுச் சலுகை

மெய் சிலிர்க்கும் - உள்ளம் கவரும் - புத்தாண்டின் உதயம்
அபான்ஸிடமிருந்து மாத்திரமே

LG

# Hi-Fi உலகத்தின் மன்னன்



CM9540

- Bass Blast
- Smart DJ
- Blutooth, NFC
- 2 USB ports with
- USB Direct Recording
- Portable in
- LED Lighting

ரூ.109,990

விசேட விலை ரூ. 99,990

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

011 5999 000

Abans.com அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அபான்ஸ் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமும் பெறலாம்

Abans



# மருத்துவப் பல்கலைக்கழகம்

## அனுமதி, புலமைப்பரிசிலுக்கான நேர்முகம்

அமெரிக்கா | கனடா | அவுஸ்திரேலியா | இங்கிலாந்து | ஐரோப்பா | மலேசியா

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பணியாற்றும் ஆயிரக் கணக்கான மருத்துவர்களை உருவாக்கிய 13 வருடகால வெற்றிகரமான வரலாற்றைக் கொண்டுள்ளோம்.
மொத்த செலவு ரூபா. 560,000 விலிருந்து

**உயர்தர பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருப்போர் விண்ணப்பிக்கலாம்**

இந்த ஏப்ரல் அல்லது செப்ரெம்பர் மாதத்தில் இலங்கை மருத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் உங்கள் மருத்துவ பட்டப்படிப்பை ஆரம்பித்து நேரத்தை சேமியுங்கள்.

**கட்டுப்படியான கல்வி**

ரியூஷன் கட்டணத்தை தவணை அடிப்படையில் செலுத்தலாம். கட்டுப்படியானதும் சௌகரியமானதுமான விடுதி வசதிகள் உண்டு.

**இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வேலை பயிற்சிகளை மேற்கொள்ளலாம்**

வேலைவாய்ப்பிற்கு இலங்கை மருத்துவ சபை (SLMC), உலக சுகாதார ஸ்தாபனம்WHO, பிரிட்டிஷ் பொது மருத்துவ சபை,GMC (UK), ECFMG (USA), அவுஸ்திரேலிய மருத்துவ சபை AMC (Australia), ஆகியவற்றின் முழுமையான அங்கீகாரம் உண்டு.

**பட்டதாரிகளுக்கான அனுமதி**

BSc பட்டம் (இலங்கை அல்லது சர்வதேசம்) உள்ள மாணவர்கள் 4 வருடகால மருத்துவ கற்கைநெறிக்கு தகுதி உள்ளவர்களாவர்.



Dr.Aarani Sathananthan
Bishop's College - Colombo
VSMU (Europe) Graduate 2013

Dr.Dharangan Bakthaseelan : 0773 01 76 66
Mr.Inthikab Zufer : 0777 66 22 33

அடுத்த உள்ளீர்ப்புக்கு இப்பொழுதே விண்ணப்பியுங்கள்

இல.111 ½, மாயா அவெனியூ, கொழும்பு 06. www.pathestudy.org

PATHE STUDY MEDICINE www.pathestudy.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 ஏப்ரல் 01ஆம் திகதி வெளியிடப்பட்டது.

noolaham.org | aavanaham.org